பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி31 வியாழக்கிழமை 17.10.2024 கதிர் 344

# ஒக்டோபரில் 13 நாட்களில் மட்டும் 42 ஆயிரம் கோடி ரூபாய் கடன்

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

**2024ஆம் ஆண்டு ஒக்டோபர் 2 முதல் 15 வரையான 13 நாட்களில் அரசாங்கம் 41,900 கோடி ரூபாய் அல்லது 419,000 மில்லியன் ரூபாய் திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைமுறிக் கடன்களாகப் பெறப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட அமைப்பாளர் ரோஹினி கவிரத்ன தெரிவித்தார்.**

**தம்புள்ளையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போது திருமதி கவிரத்ன இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**தற்போதைய ஆட்சியாளர்கள் வரம்பற்ற கடன்களை தொடர்ந்து பெற்று வருகின்றனர். இதனால் நாட்டிற்கு உறுதியானநிவாரணம்கிடைக்காது. இன்னும் ஓய்வூதியதாரர்களுக்கான இரண்டு மாத நிலுவைத் தொகையான 6000 ரூபாயைச் செலுத்த முடியவில்லை. அரச ஊழியர்களின் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை வழங்கமுடியாது என்பது ஏற்கனவே தெளிவாகியுள்ளது.**

**@ அக்டோபர் 02 - ரூ 142.2 பில்லியன் அல்லது ரூ 14,200 கோடி**

**@அக்டோபர் 09 - ரூ 85 பில்லியன் அல்லது ரூ 8,500 கோடி**

**@ அக்டோபர் 11 - ரூ 95 பில்லியன்** ☞ 2



# மருந்துகள் உற்பத்தியில் முதலிட கியூபா ஆர்வம்

இலங்கையின் மருந்துகள் உற்பத்தியில் முதலீடு செய்வதற்கு கியூபா அரசு கவனம் செலுத்தியுள்ளது. கியூபா தூதுவர் அன்த்ரேஸ் மாசெர்லோ கொன்சாலெஸ் கொரிடோ இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய மற்றும் கியூபா தூதுவர் இடையில் பிரதமர் அலுவலகத்தில் நடந்த கலந்துரையாடலின்போது தனது அரசின் வாழ்த்துக்களை பிரதமருக்குத் தெரிவித்த தூதுவர், இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது இலங்கை மற்றும் கியூபாவுக்கு இடையில் காணப்படும் 65 வருடங்களைக் கடந்த நீண்டகால இராஜதந்திர தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இரு தரப்பினரும் கலந்துரையாடினர். கியூபாவின் உதவியின் கீழ் முன்னெடுக்கப்பட்டு தற்போது நிறுத்தப்பட்டுள்ள நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டத்தை மீள ஆரம்பித்தல், இலங்கையின் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கெனவைத்திய, விளையாட்டுக் கல்வி தொடர்பான புலமைப் பரிசில் வழங்கல் உட்பட பல முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

கடந்த பல வருடங்களாக கியூபா முகங்கொடுத்த பொருளாதாரச் சவால்களுக்கு மத்தியிலும், ☞ 8

# மலையகத் தமிழ் மக்களினது வாக்குகளை சிதறடிக்க முயற்சி

## ஜீவன் தொண்டமான் குற்றச்சாட்டு

மலையக மக்களுடைய வாக்குகளை சிதறடிக்க முயற்சி செய்கின்றனர். நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை 30 சுயாதீனக் கட்சிகள் உருவாகியுள்ளன. இந்தக் கட்சிகளால் தமிழ் பிரதிநிதித்துவத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான ஜீவன் தொண்டமான் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

நோர்வூட் நிவ்வெளிகம பகுதியில் நேற்று இடம்பெற்ற முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்ட தொழிலாளர்களுடைய சம்பள ☞ 2

# பொலிஸ் அதிகாரிக்கு லஞ்சம் கொடுக்க முற்பட்டவர் கைது

ஹெரோயின் கடத்தலை சுதந்திரமாக மேற்கொள்வதற்காக மட்டக்குளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு 50ஆயிரம் ரூபாய் இலஞ்சமாக வழங்க முயற்சித்த போதைப்பொருள் வியாபாரி எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் நேற்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். ☞ 8

# இது ரகசியம் அல்ல!

இலஞ்ச, ஊழலுக்கு எதிரான குரலோடுதான் அநுர ஆட்சிக்கு வந்தார். அதிலும் முன்னாள் ஆட்சியாளர்களுக்கு எதிரான இலஞ்சஊழல்குற்றச்சாட்டுக்கள் ☞ 2

# விருப்பு வாக்கு இலக்கங்கள் நேற்று வெளியீடு

பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் விருப்பு இலக்கங்கள் நேற்று முற்பகல் வெளியிடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இம்முறை பொதுத் தேர்தலில் 8,352 வேட்பாளர்கள் களமிறங்குகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் ☞ 8

# குடிதண்ணீர் போத்தல்களை மீண்டும் பயன்படுத்தாதீர்கள்

## சுகாதார அமைச்சு அறிவுறுத்து

குடிதண்ணீரைச் சேமித்து வைப்பதற்காக பிளாஸ்டிக் போத்தல்களை மீண்டும் பயன்படுத்துவதைதவிர்க்குமாறு பொதுமக்களுக்கு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

சிலர் பிளாஸ்டிக் போத்தல்களை தண்ணீர் சேமிப்புக்காக மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதாக சுகாதார அமைச்சின் உணவு பாதுகாப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

பிளாஸ்டிக் போத்தல் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் பொருட்களிலுள்ள இரசாயனங்கள் அதனை மீண்டும் மீண்டும் பயன்படுத்தினால் தண்ணீரில் கசியும் என்று உணவு பாதுகாப்புப் பிரிவு எச்சரித்துள்ளது.

இவற்றில் சில இரசாயனங்கள் புற்றுநோயை உண்டாக்கக்கூடியவை என்றும் இது குறிப்பிடத்தக்க உடல்நல பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது ☞ 8

# ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் தனியார் மயப்படுத்தப்படாது

## ஆளும் தரப்பு தீர்மானம்

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸை தனியார் மயப்படுத்தும் திட்டத்தை தற்போதைய ஆளும்தரப்பு கைவிட தீர்மானித்துள்ளதாக நிறுவனத்தின் புதிய தலைவர் சரத் கனேகொட தெரிவித்துள்ளார்.

அதிக இலாபம் ஈட்டும் விமான சேவையாக ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸை மாற்றுவதற்கு தேவையான மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ரி.ரி.ஜி. ஏசியாவிற்கு வழங்கியுள்ள நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு ஸ்ரீலங்கன் ☞ 2

# தேசிய மக்கள் சக்தியை பலப்படுத்தவேண்டும்

## வடக்கு மக்களிடம் சந்திரசேகரம் கோரிக்கை

வடக்கு மக்கள் தேசிய மக்கள் சக்தியை பலப்படுத்தவேண்டும். அதற்காக மக்கள் பிரதிநிதி ஒருவரைத் தெரிவு செய்யவேண்டும். நாம் ஒருபோதும் முன்னாள் அமைச்சர்களை எம்மோடு சேர்த்துக்கொள்ளமாட்டோம் என்று தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளரும், நிஷ்வேற்றுக்குழு உறுப்பினருமான சந்திரசேகரம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றையதினம், கட்சியின் பரப்புரைப் பணிகளை உத்தியோகபூர்வமாகத் தொடக்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாங்களும் அரசுக்கு எதிராக ஆயும் ஏந்திப்போராடியவர்கள்தான். அதனால் ஏற்படும் பாதிப்புக்களை எம்மால் புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. சொந்தங்கள் காணாமல் போயுள்ளதால் அவர்களை தேடிக்கொண்டிருப்ப ☞ 8

# பொதுத் தேர்தலைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

பொதுத் தேர்தலைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தவேண்டும் என்றும் புதிய அரசமைப்புக்கான பணிகள் தொடங்கப்படாவிட்டால், அதனைத் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலையும் நடத்தவேண்டும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமான மீளாய்வுக் கூட்டமொன்று பத்தரமுல்லயில் நேற்று நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் தொடர்பிலும் நாட்டின் இறையாண்மை தொடர்பிலும் தான் நாம் கருத்துக்களை வெளியிடுகின்றோம். தேவையானவற்றையே கூறவேண்டும். தவறான விடயங்களை வெளிப்படுத்துவதை தவிர்க்கவேண்டும். சமூகம் தவறானதொரு ☞ 8

## மன்னார் நீதிபதிக்கு எதிரான

# சுவரொட்டிகளை அச்சிட்ட அச்சக உரிமையாளர் கைது

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக கொழும்பில் மண் சுவரொட்டியை அச்சிட்டதாக கூறப்படும் யக்கல பிரதேச அச்சக உரிமையாளர் கைது செய்யப்பட்டுள் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கடந்த காலங்களில் ஜேவிபியினாலேயே அதிலும் குறிப்பாக அநுரவினாலேயே அம்பலப்படுத்தப்பட்டது என்பதால் அவர் அதிகாரத்திற்கு வந்ததும் ஆட்டம் தொடங்கும் என்று எதிர்பார்த்த மக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு மூலம் விசாரணை, பழைய கோப்புக்களைத் தூசு தட்டுகின்றோம் என்கிற முணுமுணுப்புக்கள் தான் ஆட்சியாளர்களிடம் இருந்து வருகின்றனவே தவிர. அதிரடி ஆட்டம் எதையும் காணவில்லை. அதற்கான அசுமாத்தங்களும் இல்லை. ஆளும் தரப்பு எந்தச் சுறாவுக்கும் வலை வீசுவதாகத் தெரியவில்லை. ஆனால் ஆங்காங்கே சில நெத்தலிகள் மாட்டுகின்றன. அவையும் தாமகச் சிக்கிக்கொள்கின்றன.

அந்த வகையில் இப்போது இரண்டு இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கிழக்கு மாகாண வருமான திணைக்கள பிரதி ஆணையாளர் ஒருவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு செங்கலடி பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் செய்த முறைப்பாட்டிற்கு அமைய இந்த சுற்றிவளைப்பு நடத்தப்பட்டதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சத்துருக்கொண்டல் பகுதியில் 65 பேர்ச்சஸ் காணியை ஒரு கோடி ரூபாவுக்கு கொள்வனவு செய்த ஒருவர் அதனை வெறும் 6 இலட்சம் ரூபாய் பெறுமதிக்குப் பதிவு செய்து முத்திரை வரி செலுத்தியுள்ளார். ஆனால் அவர் வாங்கிய காணியின் பெறுமதி இரண்டு கோடியே 65 இலட்சம் ரூபா என மாகாண வருவாய் அலுவலகம் மதிப்பிட்டுள்ளது. இதன்படி காணியை வாங்கியவர் அரசுக்கு 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மேலதிக வரியைச் செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த வரியை 2 லட்சம் ரூபாயாகக் குறைப்பதற்கு 2 லட்சம் லஞ்சம் வாங்கினார் என்ற குற்றச்சாட்டின் கீழேயே கிழக்கு மாகாண வருமான வரி அதிகாரி கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

லஞ்சப் பணம் கிழக்கு மாகாண வரிமான வரி திணைக்களத்தில் வைத்து அதிகாரியிடம் கையளிக்கப்பட்டபோது லஞ்ச ஊழல் ஆணைக்குழுவினரால் பிரதி ஆணையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் முற்படுத்த உள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இப்படி 2 லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கியவர்களைப் பிடிப்பதில் காட்டும் ஆர்வத்தை 2 ஆயிரம் கோடி ரூபாயை ஆட்டையைப் போட்டவர்களைப் பிடிப்பதில் அநுர அரசு எப்போது காட்டப்போகிறது என்று காத்திருக்கிறார் மக்கள்.

.....................

ஜனாதிபதித் தேர்தல் காலங்களில் அரச ஊழியர்களுக்குச் சம்பள அதிகரிப்பு என்பது ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவராலும் வழங்கப்பட்ட வாக்குறுதி. தற்போதைய ஜனாதிபதி அநுரவும்கூட அத்தகைய வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். ரணில் ஒருபடி மேலே போய் 2025 ஜனவரியில் அரச பணியாளர்களுக்கு சம்பள அதிகரிப்புக் கிடைக்கும் என்றார். அதற்கான அமைச்சரவையின் அனுமதியும் பெறப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அந்த அமைச்சரவை முடிவுப்படி அரச பணியாளர்களுக்கு ஜனவரியில் சம்பள அதிகரிப்புக் கிடைக்குமா என்பது இப்போது சந்தேகம்தான்.

காரணம், ஜனவரியில் சம்பள அதிகரிப்பு வழங்க ரணிலின் அமைச்சரவை முடிவெடுத்திருந்தாலும் அப்படிச் சம்பளத்தை அதிகரிப்பதற்குத் தேவையான சம்மதத்தை நிதி அமைச்சோ திறைசேரியோ வழங்கவில்லையாம். அதனால் இந்த முடிவை இப்போது மீளாய்வு செய்ய வேண்டியிருக்கிறது என்று அறிவித்திருக்கிறது அநுரவின் அமைச்சரவை.

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு முன்னைய ஆளும் தரப்பு எடுத்த தீர்மானத்தை மீளாய்வு செய்யவேண்டியி இருக்கிறது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

'சம்பள அதிகரிப்பு பொதுமக்களை தவறாக வழிநடத்தியுள்ளது' என அமைச்சர் ஹேரத் விளக்கமளித்தார். ஆகமொத்தத்தில் ஜனவரியில் சம்பள அதிகரிப்பு எனக் காத்திருந்தவர்களுக்கு அனேகமாக ஏமாற்றம்தான் மிஞ்சும்போலத் தெரிகிறது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## ஒக்டோபரில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது ரூ 9,500 கோடி

@ அக்டோபர் 15 - அரசாங்கம் 97 பில்லியன் ரூபாய் அல்லது 9,700 கோடி ரூபாய் அளவுக்கு புதிய கடன்களை எடுத்துள்ளது.

கடந்த சில நாட்களாக அரசு ரூ. 3,223 கோடிகள், அதாவது ஒரு மணிநேரத்திற்கு ரூ. 134.29 கோடிகளைக் கடனாகப் பெறப்பட்டுள்ளது. இந்தக் கடனை என்ன செய்வீர்கள்? இந்தக் கடன்களின் முதலீடு என்ன? என்பதை அரசு விளக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## சுவரொட்டிகளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளார். அவரை நவம்பர் 18 வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே நேற்று உத்தரவிட்டார்.

இந்த சுவரொட்டி குறித்து தனக்கு எதுவும் தெரியாது எனவும், அது தனது ஊழியர்களால் அச்சிடப்பட்டது எனவும் நீதிமன்றத்தில் தெரிவித்தார் அச்ச உரிமையாளர் தசுன் தராங்க. எனினும் அவரது பிணைக் கோரிக்கையை நிராகரித்த நீதிவான் அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

சிங்களத்தில் சுவரொட்டியை அச்சிடுவதற்கான பணத்தை ஏற்றுக்கொண்டுவிட்டு அது என்னவென்று தெரியாது எனக் கூறிவிட முடியுமா என்று சந்தேகநபரின் சட்டத்தரணியிடம் நீதிவான் கேள்வி எழுப்பினார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய பிரதி பொலிஸார், சுவரொட்டிகளை அச்சிட்டதற்கான 43,500 ரூபாய் பணத்தை தாம் எடுத்துச் சென்று கொடுத்தபோது அச்சக உரிமையாளர் அதனைப் பெற்றுக்கொண்டார் என்று நீதிமன்றில் தெரிவித்தனர்.

## ஸ்ரீ லங்கன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எயார்லைன்ஸ் மிக முக்கியமான காரணிகளில் ஒன்றாகும். இந்த நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் 50 சதவீதமானோர் ஸ்ரீலங்கன் விமான சேவையைப் பயன்படுத்தி வருகின்றனர்.

2030ஆம் ஆண்டுக்குள் 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வரும் வேலைத் திட்டத்திற்காக இந்த விமான சேவையை மறுசீரமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக சரத் கனேகொட குறிப்பிட்டுள்ளார்.

## மலையகத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயத்தில் 1350 ரூபா அடிப்படை சம்பளமும் மேலதிக கொடுப்பனவாக 350 ரூபாவை அதிகரிக்குமாறும் சம்பள நிர்ணய சபையில் நாங்கள் கோரிக்கையை முன்வைத்தபோது அதனை நிராகரித்தது தற்போதய ஜனாதிபதியுடைய கட்சியான தேசிய மக்கள் சக்தி .

விமர்சனங்கள் பல இருந்தாலும் நான்கு வருடகாலமாக எமது மக்களுக்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தேன். அதேபோல் மக்களின் பிரச்சினைகளுக்காக களத்தில் இறங்கி நான் குரல் கொடுத்திருக்கின்றேன். எந்த இடத்திலும் நான் ஓடி ஒழியவில்லை. நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை 30 சுயாதின கட்சிகள் உருவாகியுள்ளன. இந்தக் கட்சிகளால் தமிழ் பிரதிநிதித்துவத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்ற பட்டியலை எடுத்து நோக்கினால் முன்னாள் அமைச்சர் திகாம்பரம், நான், முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான இராமேஸ்வரன், உதயகுமார் போன்ற அநேகமான பெயர்கள் காணப்படும். ஆனால் தற்போது ரவீந்திரன் என்பவருடைய பெயரும் காணப்படும். அவர்தான் நுவரெலியா மாவட்டத்தில் பிரதான வேட்பாளர்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# இலங்கைக்கு உதவுவதில் தென்னாபிரிக்கா ஆர்வம்

இலங்கையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறைகளை வலுப்படுத்துவதில் தென்னாபிரிக்க அரசு விசேட கவனம் செலுத்தி வருவதாக அந்தநாட்டு உயர்ஆணையர் எட்வின் ஷால்க் தெரிவித்தார்.

பிரதமர் ஹரிணி அமரசூரிவுக்கும் தென்னாபிரிக்க ஆபிரிக்க உயர்ஸ்தானிகருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக்கும் தென்னாபிரிக்காவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை மேம்படுத்துதல், நாட்டில் உற்பத்தித் துறையை வலுப்படுத்துதல், சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்தல் மற்றும் கல்வித்துறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு ஆகிய விடயங்கள் தொடர்பிலும் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

# கேபிள் கார் திட்டத்தில் தலையிடவேகூடாது

## நீதிமன்றம் தடை உத்தரவு

தனியார் நிறுவனம் ஒன்றினால் முன்னெடுக்கப்படும் அம்புலுவாவ கேபிள் கார் திட்டத்தில் தேவையற்ற வகையில் தலையிடவோ அல்லது இடைநிறுத்தவோ கூடாது என்று கம்பளை உடபலத்த பிரதேச செயலாளருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இடைக்கால தடை விதித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியசர்களான எம்.லாஃபர் மற்றும் பி.குமாரரத்தினம் ஆகிய இருவர் அடங்கிய பெஞ்ச், இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. இந்த இடைக்கால உத்தரவு ஒக்டோபர் 29 ஆம் திகதி வரை அமலில் இருக்கும்.

எம்.டி. அம்பர் அட்வென்ச்சர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் தாக்கல் செய்த ரிட் மனுவுக்கு இணங்கவே இந்த இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஏறக்குறைய 1,621.5 மீற்றர் ரோப்வேயுடன் கூடிய கேபிள் கார் திட்டத்தை உருவாக்க, இயக்க மற்றும் மாற்றுவதற்கான மனுதாரரின் திட்டத்திற்கு பிரதேச செயலாளரின் சட்டவிரோதமான முறையில் தலையீடு செய்கிறார். இது தங்களுடைய சேவையை முன்னெடுப்பதற்கு தடையாக உள்ளதாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டத்தரணி சனத் விஜேவர்தனவின் அறிவுறுத்தலின் பேரில் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி மற்றும் ஷெஹானி அல்விஸ் மற்றும் நமிக் நஃபத் ஆகியோர் மனுதாரர் சார்பில் ஆஜராகினர்.

# அரசியலுக்கு திறமையானோரை கொண்டுவருவதே எமது இலக்கு

## வேட்பாளர் ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

கட்சியிலிருந்து வெளியேறினாலும் பரவாயில்லை. திறமையானவர்களை அரசியல் களத்துக்கு கொண்டுவந்து, கட்சியை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச்செல்வதே எமது இலக்காக இருக்கும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில், ஐக்கிய மக்கள் கூட்டணியில், திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் மருத்துவர் ஹில்மி மஹ்ரூபை ஆதரித்து, நேற்று கிண்ணியாவில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஜனாதிபதி தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கு நாங்கள் தீர்மானித்தோம். அந்தத் தேர்தலில் சுமார் 95 ஆயிரம் வாக்குகளை சஜித்துக்குப் பெற்றுக்கொடுத்தோம். ஆனால், எமது தீர்மானத்துக்கு உடன்பட முடியாது எனக் கூறிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூப், அமைதியாக இருக்கப்போவதாகத் தெரிவித்தார். பின்னர், ரணிலின் தந்திரத்துக்குப் பலியாகி எமது கட்சியிலிருந்து தூரமாகிவிட்டார்.

அப்துல்லாஹ் மஹ்ரூப் கட்சியின் வளர்ச்சிக்காக கடந்த காலங்களில் செய்த பணிகளுக்கு நன்றி கூறுகிறோம். 2010 மற்றும் 2015 தேர்தல்களில், அவரை வேட்பாளராக நிறுத்தி வெல்ல வைத்ததும் எமது கட்சியே. இதற்காக இம்மாவட்டத்தைச் சேர்ந்த பலர் உழைத்தனர். இப்போது அப்துல்லாஹ் மஹ்ரூப் எங்களுடன் இல்லை. எவர் வெளியேறினாலும் பரவாயில்லை. திறமையானவர்களை களத்துக்கு கொண்டுவந்து, கட்சியை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச்செல்வதே எமது இலக்காக இருக்கும்.

அந்தவகையில், மருத்துவர் ஹில்மி மஹ்ரூபை நாடாளுமன்றத் தேர்தலில் நிறுத்தியுள்ளோம். நகர சபைத் தவிசாளராக இருந்த இவரிடம் நிறைய அனுபவங்கள் உள்ளன. சிறந்த கல்விமானாகவும் ஒழுக்கசீலராகவும் அவரை நாம் பார்க்கிறோம். இறைவன் நாடினால் அவரது வெற்றி உறுதியாகும்.

புல்மோட்டை முதல் தோப்பூர் வரை அவருக்கு ஆதரவு இருக்கிறது. இம்மாவட்டத்தின் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தி உழைப்பதற்கு, மருத்துவர் ஹில்மி மஹ்ரூபை வெற்றியடையச் செய்யவேண்டும் என்றார்.

# வாக்காளர் ஒருவருக்காக செலவிடக்கூடியது ரூ. 109

நவம்பர் 14 இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலுக்காக வேட்பாளர் ஒருவர் வாக்காளருக்காகச் செலவிடக் கூடிய வரையறை அடங்கிய அதிவிசேட வர்த்தமானி இன்று அரச அச்சகத்திற்குக் கையளிப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதற்கான பணிகள் தீவிரமாக இடம்பெறுகின்றன என்றார் அவர்.

இது தொடர்பிலான யோசனைகள் அரசியல் கட்சிகளின் செயலாளர்களிடம் இருந்து நேற்றுப் பெறப்பட்டதாக ஆணைக்குழுவினர் தெரிவித்தனர்.

இதன்படி, பெரும்பாலும் வாக்காளர் ஒருவருக்காக வேட்பாளர் ஒருவர் 109 ரூபாயை செலவிட முடியும் எனக் கட்சிகளின் செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் விருப்பு இலக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

பொது தேர்தலுக்கான உத்தியோகப்பூர்வ வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 26ஆம் திகதி அஞ்சல் நிலையங்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன

அதேநேரம் இந்த மாதம் 27 மற்றும் 31ஆம் திகதிகளிலும் அடுத்த மாதம் 3ஆம் திகதியும் விசேட தினங்களாக கருதி உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வீடுகளுக்கே சென்று உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் நவம்பர் 7 நிறைவு செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# சர்வதேச நாணய நிதியத்தின் சீர்திருத்த பாதையிலேயே தொடர்ந்து பயணிக்குக

## அமெரிக்க தூதர் வர்த்தகர்கள் மத்தியில் வலியுறுத்து

பொருளாதார சீர்திருத்தங்கள் கடினமானவை. ஆனால் இலங்கை சரியான பாதையில் பயணிக்கின்றது எனத் தெரிவித்துள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் சர்வதேச நாணயநிதியத்தின் சீர்திருத்தங்களின் பாதையில் செல்லவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் அமெரிக்க இலங்கை வர்த்தக பேரவையின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது -

எதிர்காலத்தை கட்டியெழுப்புவது இலகுவான விடயமல்ல.

சர்வதேசநாணயநிதியத்தின் ஈஎவ்எவ் திட்டம் பொருளாதார ஆட்சிமுறை சீர்திருத்தங்களையும் ஊழலிற்கு எதிரான போராட்டங்களையும் கோருகின்றது.

பொருளாதார சீர்திருத்தங்கள் கடினமானவை. ஆனால் இலங்கை சரியான பாதையில் பயணிக்கின்றது.

எனக்கு புதிய ஜனாதிபதி புதிய பிரதமரை சந்தித்து இந்த விடயங்கள் குறித்து உரையாடுவதற்கான சந்தர்ப்பம் சமீபத்தில் கிடைத்தது.

சிலநாள்களிற்கு முன்னர் யுஎஸ்எயிட்டின் நிர்வாகி சமந்தா பவர் பொருளாதார சீர்திருத்தங்களின் அவசியம் குறித்தும்இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கியமான பகுதியான சிறிய நடுத்தர தொழில்துறையினருக்கு நாம் எவ்வாறுஉதவலாம்என்பதுகுறித்தும்உங்கள்ஜனாதிபதியுடன் தொலைபேசியில் உரையாடினார்.

கடந்த மாதம் வாக்குபெட்டிகள் மூலம் இலங்கை மக்கள் மாற்றத்திற்கான அழைப்பை விடுத்ததை நாம் பார்த்தோம். அவர்கள் நாட்டின் எதிர்காலத்திற்கான தங்களுடையஎதிர்பார்ப்பைநோக்கைவெளியிட்டனர்.இதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு நாட்டின் தலைவர்களிடம் உள்ளது.

அரசாங்கத்தில் உள்ளவர்களிற்கு மாத்திரமல்லாமல் வர்த்தகம், கல்வி, ஊடகம்சிவில்சமூகத்தைசேர்ந்தவர்களிற்கும் இதற்கான பொறுப்புள்ளது.

அமெரிக்கா இலங்கை ஆகியவற்றின் வர்த்தகங்களிற்கு இடையிலான உறவு பலவருட பரஸ்பர நம்பிக்கை மற்றும் பகிரப்பட்ட மதிப்புகளின்அடிப்படையில்கட்டமைக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த உறவுகள் தொடர்ந்து செழிப்பதற்கு இலங்கை அரசாங்கம் எதிர்வுகூறக்கூடிய நிலையான நிர்வாக முறையை உருவாக்குவது அவசியம்.


கொள்கைகள் தெளிவானதாகவும் விதிமுறைகள் சீரானதாகவும் சூழலில் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்படும் சூழலில்இ வணிகங்கள் செழித்து வளர்கின்றன.

ஒருநிலையானநிர்வாகஅமைப்புஅதிகமுதலீட்டைஈர்க்கும் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும்.

அமெரிக்க இலங்கை வணிக உறவுகளின் எதிர்காலம் குறித்து நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். சர்வதேச நாணயத்தின் சீர்திருத்தங்களின் பாதையில் செல்வதன் மூலம் ஊழலிற்கு எதிராக போராடுவதன் மூலம், அனைவரினதும் குரல்களும்செவிமடுக்கப்படும்அனைவரும்உள்ளடக்கப்படும் எதிர்வுகூறக்கூடிய நிர்வாக அமைப்பை கட்டியெழுப்புவதன் மூலம்எங்கள்பொருளாதார கூட்டாண்மையின்முழுமையான திறனை வளர்க்க முடியும். - என்றார்.(05)

# இந்திய இலங்கை உறவில் புதிய மனோநிலைக்கு இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா அழைப்பு

## பிளவுபடுத்தும் முயற்சிகள் குறித்தும் எச்சரிக்கை



கடந்தகாலதயக்கங்களைகடந்துபொதுவானஇலக்குகளை அடைவதற்கு மனோநிலையை மாற்றிக்கொள்ளவேண்டும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா வேண்டுகோள்விடுத்துள்ளார்.இலங்கைக்கும்இந்தியாவிற்கும் இடையிலான வலுவான பங்காளித்துவத்தின் அவசியத்தை வலியுறுத்தியுள்ள அவர் இருநாடுகளினதும் தலைவிதிகள் பின்னிப்பிணைந்தவை என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற பட்டயக்கணக்காளர்கள் சங்கத்தின் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இருநாடுகளையும் பிணைக்கும் பகிரப்பட்ட புவியியல் இவரலாறுமற்றும்எதிர்காலம்குறித்துஇந்தியஉயர்ஸ்தானிகர் தனது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாங்கள் இணைந்து வளரவேண்டும் செழிப்படைய வேண்டும்நாங்கள்வரலாறுபுவியியல்மற்றும்எதிர்காலத்தினால் இயற்கையாகவே பிணைக்கப்பட்டிருக்கின்றோம் என உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் ஈடுசெய்ய முடியாதவர்கள் இன்றியமையாதவர்கள் மற்றும் பிரிக்க முடியாதவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். பிளவுகளை உருவாக்கும் எந்தவொரு முயற்சியும் இருநாடுகளினதும்பகிரப்பட்டஅபிலாசைகள்மற்றும் எதிர்காலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை என இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.(05)

# நியாயமான முறையில் பொதுத்தேர்தலை நடத்திமுடிக்க ஒத்துழைப்பு வழங்குங்கள்

## ஊடகப் பிரதானிகளிடம் தேர்தல்கள் ஆணையாளர் வேண்டுகோள்




ஜனாதிபதித்தேர்தலைத் தொடர்ந்து எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத்தேர்லிலும் சகல வேட்பாளர்களுக்குமான சமவாய்ப்பை வழங்கி, அத்தேர்தலை நியாயமான முறையில் நடாத்திமுடிப்பதற்கு அவசியமான முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க சகல ஊடகங்களிடமும் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

பொதுத்தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தல் மற்றும் வேட்புமனுத்தாக்கல் என்பன கடந்த வெள்ளிக்கிழமை நண்பகலுடன் முடிவுக்கு வந்தது.

அதனையடுத்து எதிர்வரும் பொதுத்தேர்தலில் அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியும், சுயேச்சையாகவும் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்கள் நாடளாவிய ரீதியில் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் உள்ளடங்கலாக இந்த ஒட்டுமொத்த தேர்தல் செயன்முறையையும் சீரான முறையில் முன்னெடுத்துச்செல்வதற்குஅவசியமானமுழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு கொழும்பிலுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவில் செவ்வாய்கிழமை ஊடகப்பிரதானிகளுடன் நடைபெற்ற சந்திப்பின்போது தேர்தல்கள்ஆணையாளர்நாயகம்சமன்ஸ்ரீரத்நாயக்க வேண்டுகோள்விடுத்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க, ஆணைக்குழுவின் உறுப்பினர்களான எம்.ஏ.பி.சி.பெரேரா, அமீர் பாயிஸ், அனுசூயா சண்முகநாதன், பேராசிரியர் லக்ஷ்மன் திஸாநாயக்க மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க ஆகியோரின் பங்கேற்புடன்நடைபெற்றஇச்சந்திப்பில்மும்மொழிமூல இலத்திரனியல் மற்றும் அச்சூடகங்களின் பிரதானிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது ஜனாதிபதித்தேர்தல் நடைபெற்ற காலப்பகுதியில் வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகளுக்காக ஊடகங்களால் வழங்கப்பட்ட காலப்பகுதியின் நியாயபூர்வத்தன்மை, தேர்தல் பிரசாரங்கள் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதன் பின்னரான காலப்பகுதியில் ஊடகங்களும் அதனை உரியவாறுபின்பற்றிநடந்துகொண்டமை, பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் விடுக்கப்பட்ட அறிவிப்புக்களைமக்களிடம்கொண்டுசென்றுசேர்ப்பதில் ஊடகங்கள் வழங்கிய ஒத்துழைப்பு என்பவற்றை நினைவுகூர்ந்து நன்றி தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின்தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க, அக்காலப்பகுதியில் சில ஊடகங்களின் நியாயமற்ற நடத்தைகளைச் சுட்டிக்காட்டி, அவை மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும், எதிர்வரும் பொதுத்தேர்தலை நியாயமான முறையில் நடாத்திமுடிப்பதற்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்குமாறும், இத்தேர்தலில் போட்டியிடும்சகலவேட்பாளர்களுக்கும்இயலுமானவரை சமத்துவமான பிரசார வாய்ப்பை அளிக்குமாறும் அவர் ஊடகப்பிரதானிகளிடம் கேட்டுக்கொண்டார். (05)

# எரிபொருள் விலைக் கட்டுப்பாடு தொடர்பாக ஆராய விசேட குழு

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றம் காரணமாக எரிபொருள் விலை உயர்வடைந்தால் அதனை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது தொடர்பில் ஆராய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அவதானிப்பு அறிக்கைகளின் அடிப்படையில்இந்தக்குழுபகுப்பாய்வுசெய்துபுதியவிலைகளைப்பரிந்துரைசெய்யும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்கள் குறித்து அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பு செவ்வாய்க்கிழமை நடந்தபோது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மத்திய கிழக்கில் நிலவும் இராணுவச் சூழ்நிலையால், எண்ணெய் விலை உயரும் அபாயம் உள்ளது. இது தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கண்காணிப்பு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. அந்த சூழ்நிலையில் தலையிட்டு எண்ணெய் விலையை எவ்வாறு கட்டுப்படுத்துவது மற்றும் அதை எவ்வாறு சமாளிப்பது என்பதை இந்த குழுவும் சேர்ந்து முடிவு செய்யும்.

ஆளும்தரப்பு எரிபொருள் விலையை குறைத்த போதிலும் பஸ் கட்டணம் ஓரளவு குறைக்கப்பட்ட போதிலும் பாடசாலை போக்குவரத்து கட்டணம் குறைக்கப்படவில்லை. எனவே, பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் சிற்றூர்திகள் மற்றும் பேருந்துகளின் கட்டணங்களைக் குறைப்பது குறித்து இரண்டு வாரங்களுக்குள் பரிந்துரைகளை வழங்கும்படியும் இந்தக் குழுவிடம் கேட்கப்பட்டுள்ளது

## கஞ்சாவோடு தவறாகக் கைது செய்த

# ஆயுர்வேத மருந்தக ஊழியர்களுக்கு இழப்பீடு வழங்க நீதிமன்றம் உத்தரவு

செவனகல பிரதேசத்தில் உள்ள பிரபல ஆயுர்வேத வைத்தியர் ஒருவரின் மருந்தகத்தில் கஞ்சாவுடன் ஊழியர்களை மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கைது செய்ததன் மூலம் அவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதிகாரிகள் தமது தனிப்பட்ட பணத்தில் இருந்து மருந்தக ஊழியர்களுக்கு தலா ரூ. 10,000- மற்றும் ஆயுர்வேத மருத்துவர் மற்றும் அவரது ஊழியர்களுக்கு அரசும் தலா ரூ. 10,000- இழப்பீடு வழங்கவும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

செவனகல பிரதேசத்தில் பிரபல ஆயுர்வேத மருந்தகத்தை நடத்தி வரும் கலாநிதி கமல் பந்துல வீரப்பெரும மற்றும் அவரது மருந்தகத்தின் நான்கு ஊழியர்களின் அடிப்படை உரிமைகள் மீறல் மனு மீதே நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரிதி பத்மன் சூரசேன, பிரியந்த பெர்னான்டோ மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பழையவர்களிடமிருந்தே புதியவற்றை எதிர்பார்க்கலாமா?

**முறையற்று இருக்கும் இலங்கையின் விவசாயத் தொழிலைஒழுங்கமைக்கப்பட்டநிலைக்குக்கொண்டு வருவதற்கு நீண்டகால ஒருங்கிணைந்த தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.**

**ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வின் போதே அரசுத் தலைவர் இதனைக் குறிப்பிட்டார்.**

**முன்னையஆளும்தரப்புக்களால்முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள்ஓரளவு வெற்றியடைந்தாலும்அதன் மூலம் கிராமப்புறவறுமைஎந்தஅளவிற்குதீர்க்கப்பட்டுள்ளது என்றகேள்வியுள்ளதாகவும்தெரிவித்தார். எனவே எதிர்காலத்தில் கிராமிய வறுமையை ஒழிப்பதே கிராமிய அபிவிருத்தித் திட்டங்களின் பிரதான இலக்காக இருக்கவேண்டுமென அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க சுட்டிக்காட்டினார். முழு நாட்டையும் உள்ளடக்கிய வகையில் கிராமப்புற வறுமையைஒழிக்கபுதியவிரிவானவேலைத்திட்டத்தின் தேவையும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.**

**வறுமைஎன்பதுபணப்பற்றாக்குறைமாத்திரமன்றி, சமூகத்தில் ஒரு பிரிவினரை ஓரங்கட்டுவது மற்றும் ஒரு பெரும் சமூகப் பேரழிவு என்றும் வலியுறுத்திய அரசுத்தலைவர்அநுரகுமாரதிஸநாயக்க, கிராமப்புற வறுமையை ஒழிப்பதற்கான இலக்குமயப்பட்ட வேலைத்திட்டத்தின்அவசியத்தையும்சுட்டிக்காட்டினார்.**

**அரசுத் தலைவரின் உள்நோக்கமும் திட்டமும் சிறப்புத்தான். அவற்றைக் கேட்கும்போது மகிழ்ச்சியாகத்தான் இருக்கின்றது. இதற்கு முன்னர் ஆட்சிக்கு வந்தவர்களும் இதுபோன்றே விவசாயத்துறையை நவீனமயப்படுத்தி முன்னேற்றவேண்டும் என்று தொண்டைத் தண்ணீர் வற்றக் கத்தினார்கள். திட்டங்களை அறிமுகப்படுத்தினார்கள். ஒவ்வொரு ஆட்சி மாற்றத்தின்போதும் இந்தக் குரலை ஓங்கிக் கேட்க முடிந்தது. ஆனால் கடைசியில் விவசாயிகளுக்கு எந்தமுன்னேற்றமும்அற்றநிலைதான்நீடிக்கின்றது. அநுரவே சொல்வதைப் போன்று கிராமங்களின் பிரதான பொருளாதாரம் விவசாயம் இருக்கையில் அங்கு வறுமை மட்டுமே தாண்டவமாடுகின்றது.**

**முன்னைய ஆட்சியாளர்களின் திட்டங்களை உருவாக்கி அவற்றைச் செயற்படுத்தியவர்கள் இந்த அரச அதிகாரிகளும் ஆளணியினருமே. அவர்களால் வெற்றிகரமான செயற்றிட்டம் ஒன்றை உருவாக்கி அதனைச் செயற்படுத்த முடியவில்லை என்கிறபோது மீண்டும் அதே அதிகாரிகள் ஆளணியினரிடம் புதிய திட்டங்களை உருவாக்கச் சொல்லி செயற்படுத்தக் கோருவதில் என்ன பயன் இருக்கப்போகின்றது. விவசாயத்துறையின் மறுமலர்ச்சிக்கும் கிராமியப் பொருளாதார மேம்பாட்டுக்கும் புதிய திட்டங்களை தோற்றுப்போன அதிகாரிகளிடமிருந்து எதிர்பார்க்காமல் ஆளும் தரப்பே முனைப்புக்காட்டவேண்டும்.**

# அநுர அடுத்த சந்திரிக்காவா?

**உபுல் ஜோசப் பெர்னாண்டோ**



சிறீமாவோ பண்டார நாயக்கா தனது மகனான அனுரபண்டாரநாயக்கவை தமக்குப் பின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்(SLFP) தலைவராக்க வேண்டும் என்று விரும்பினார். எனினும், அனுரவின் இடதுசாரிகளுக்கு எதிரான நிலைப்பாடு காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் இதனை எதிர்த்தனர். 1970 மற்றும் 1977க்கு இடையில், சிறீமாவின் இடதுசாரி ஆட்சியைவெளிப்படையாக விமர்சித்தார்,

சந்தைப் பொருளாதாரம் மற்றும் ஜே.ஆரின் மேற்கத்திய சார்பு வெளியுறவுக் கொள்கைகளை ஆதரித்தார். மறுபுறம், சந்திரிகா பண்டாரநாயக்கா வேறு பாதையில் சென்று, ஜே.ஆரின் தடையற்ற சந்தைக் கொள்கைகளை எதிர்த்தார். மேற்குலக நாடுகளை, குறிப்பாக அமெரிக்காவை அவர் கடுமையாக விமர்சித்தார். இதன் விளைவாக அநுராவைவிட சந்திரிக்காவை பொருத்தமான தலைவராகக் கட்சி பார்த்தது.

சுதந்திரக்கட்சிக்கொள்கைகளுடன் சந்திரிகாவின் இணக்கப்பாடு1994 பொதுத் தேர்தலிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி பெற அவருக்கு உதவியது. ஜே.ஆரின் திறந்த பொருளாதாரத்திற்கு மனிதாபிமான



முகத்தைகொடுத்துதான் சீர்திருத்தங்களைச்செய்வார் என்று சந்திரிகா தேர்தலில் வெல்வதற்கு முன்பே உறுதியளித்திருந்தார், மேலும் அவரது கருத்துப்படி, மக்களைவிட லாபத்திற்கு முன்னுரிமை அளிக்கும் கொள்கை ஏற்புடையதல்ல. ஆனால் பதவிக்கு வந்த பின்னர் சந்திரிகா ஜே.ஆரின் பொருளாதார அணுகுமுறையையே தொடர்ந்தார்,

அவருக்கு முன்பாக தொடர்ந்து 17 ஆண்டு காலமாக ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தது. அப்போது நியமிக்கப்பட்டிருந்த பல அதிகாரிகளையே சந்திரிகாவும் தக்க வைத்துக்கொண்டார். அவரது நிதி அமைச்சகம் ஜே.ஆர். மற்றும் பிரேமதாசவின் நிர்வாகங்களைச் சேர்ந்த தனிநபர்களாலேயே ஆளப்பட்டது, மேலும் நீண்ட வரிசைகள் மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டுக்குப் பயந்து, திறந்த பொருளாதார முறையைப் பராமரிக்க சந்திரிக்காவுக்கு இந்த அதிகாரிகள் அழுத்தம் கொடுத்தனர்.

ஆட்சியைப் பிடிப்பதற்காக பாண் விலையைக் குறைப்பது போன்ற ஜனரஞ்சக வாக்குறுதியை சந்திரிகா வழங்கினார், ஆட்சிக்கு வந்ததும் அவர் அதைச் செய்தும் காட்டினார். ஒரு இறாத்தல் பாண் 5 ரூபாய்க்குக் கிடைத்தது. ஆனால் அது நீண்ட நாள்கள் நீடிக்கவில்லை. சில மாதங்களிலேயே பாண் விலை 1994இல் சந்திரிகா பதவிக்கு வரும்போது இருந்த விலையையும் தாண்டி உயர்ந்தது, இது பொதுமக்களின் அதிருப்திக்கு வழிவகுத்தது.

சந்திரிகா அமைச்சரவையில் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக கடமையாற்றிய மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட அமைச்சர்கள் அரச அதிகாரிகள் தமதுநிர்வாகத்திற்குக்குழிபறிக்கிறார்கள்என்றுஎச்சரித்தபோதும் சந்திரிகா அதைக் கண்டுகொள்ளவில்லை. ஒரு முக்கிய வரவு செலவுத் திட்டக் கூட்டத்தில், மகிந்த மற்றும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொருளாதார நிவாரணத்தை வலியுறுத்தினர், ஆனால் அவர்களின் கவலைகள் சந்திரிக்காவால் நிராகரிக்கப்பட்டன. இதனால் கோபடைந்த மகிந்த சந்திரிகா அரசின் அதிகாரி ஒருவருடன் நேரடியாக முரண்பட்டார். அவர் ஆளும்தரப்புக்கு எதிராகச் செயற்படுகின்றார் என்று குற்றஞ்சாட்டினார்.

சந்திரிகாவின் கொள்கைகள் ஜே.ஆரின் அணுகுமுறையுடன் அதிகம் இணைந்ததால், மகிந்த பாரம்பரிய சுதந்திரக் கட்சியின் நடுத்தரக் கொள்கைகளின் பாதுகாவலராக மாறினார். 2005 இல், ஒரு காலத்தில் சந்திரிக்காவை பிரதமராக ஆதரித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மகிந்த பக்கம் சாய்ந்தார்கள். சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை அவர் தொடர்ந்துபாதுகாத்ததன்காரணமாகவே அவர்கள் மகிந்தவை ஆதரித்தனர். அதனாலேயே அவரால் ஜனாதிபதியாக முடிந்தது.

2024இல், அநுரகுமார ஜனாதிபதியாகியுள்ளார். 1994இல் சந்திரிகாவின் வெற்றியைநினைவுபடுத்தும்வகையில் அமைந்திருந்தது அவரது வெற்றி. ஆட்சியைப் பிடித்தபோது சந்திரிகா எப்படி ஐதேகவின் பொருளாதார மற்றும் அரசியல் கொள்கைக்கு எதிராக இருந்தாரோ அதேபோன்றே ரணிலின் அரசியல், பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராக இருக்கிறார் அநுரகுமார. ஆனால், ஐதேகவின்மரபுக்கு எதிராக குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த சந்திரிகா போராடியதைப் போலவே, அநுரகுமாரவும்சவால்களைஎதிர்கொள்ளப்போகிறாரா என்ற கவலை கவலை உள்ளது.

தற்போது, அநுரவின் நிர்வாகம் சர்வதேச நாணய நிதியத்தின்உடன்படிக்கையைப்பின்பற்றி, கோட்டாபய மற்றும் ரணில் ஆட்சியில் இருந்த அதிகாரிகளையே தக்க வைத்துக்கொண்டுள்ளது. கொள்கைகள் தலைகீழாக மாற்றப்பட்டால், கோட்டாபயவின் பதவிக்காலம் போன்ற பொருளாதார உறுதிப்பாடு குலைந்துபோய்விடுமோ என்கிற அச்சமே அதற்கு அதற்குக் காரணம்.

சந்திரிக்காவைப் போலவே அநுரவும் பதவியிலிழந்த ஆட்சியின் முக்கிய பொருளாதார ஆலோசகர்களைத் தனது ஆலோசகர்களாகவும் நியமித்து கவலையை எழுப்புகின்றார். கிரிஷான் பாலேந்திரன், துமிந்த ஹூலங்கமுவ போன்ற கோட்டாபயவுக்கு ஆலோசனை வழங்கிய வர்த்தக பிரமுகர்கள்தற்போது அநுரகுமாரவுக்கு ஆலோசனை வழங்குகின்றனர். இந்தப் போக்கு சந்திரிக்காவைப் போன்ற கதியையே அநுரவுக்கும் ஏற்படுத்துமோ என்று சந்தேகங்களைத் தூண்டுகின்றது.

ஆனால், அநுரவின் அடிமட்ட மக்களை நோக்கிய அரசியல் அணுகுமுறை சந்திரிகாவிட்ட அதே தவறுகளை அவர் விடாது தடுக்கலாம் என்று சிலர் வாதிடுகின்றனர். ஜே.வி.பிக்குள் அடுத்த மஹிந்த ராஜபக்ச யார் என்பது தெளிவில்லை என்ற நிலையில், அநுரவிற்கு கட்சிக்குள்ளிருந்தே எழும் சவால் இப்போதைக்குக் குறைவாக இருக்கலாம்.

# தெற்கின் பெரும் அலையில் சிக்காது இனத்தின் இருப்பை உறுதிசெய்வோம்

## வேட்பாளர் மயூரன் வலியுறுத்து

தெற்கின் மாற்றம் என்ற வரையறைக்குள் தமிழ்மக்களின்தேவைகளைஅடகுவைக்காமல் தமிழ்த்தேசிய இனத்தின் இருப்பை மனதில் நிறுத்தி வாக்களிக்குமாறு முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னிமாவட்ட வேட்பாளருமான செந்தில்நாதன் மயூரன் தெரிவித்தார்.



இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடகக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தெற்கில் இன்று அரசியல் மாற்றம் ஒன்று உருவாகியுள்ளது. அந்த மக்கள் மாற்றம் ஒன்றின் அவசியத்தை உணர்ந்து அநுரவை ஆட்சியில் அமர்த்தியுள்ளனர். வடக்கு கிழக்கிலும் அவ்வாறான ஒரு மாற்றம் வரவேண்டும் என்று பலரும் சிந்திக்கின்றார்கள். அந்த மாற்றத்திற்குள் பலவிடயங்கள் இருக்கிறது.

நாடு பொருளாதார சிக்கல்களுக்கு முகம் கொடுத்து ஊழல்வாதிகளால் சூறையாடப்பட்டுள்ளது. அந்தவகையில் நாட்டில் ஒரு புதிய யுகத்தை ஏற்படுத்துவதற்காகச் சிங்கள மக்கள் ஒன்றிணைந் துள்ளனர். அதனை நாம் வரவேற்கின்றோம். அதற்கான பங்களிப்புக்களை வழங்குவதற்கு நாங்களும் தயாராக இருக்கிறோம்.

இதேவேளை தெற்கு சிங்கள மக்கள் விரும்புகின்ற மாற்றமும் வடக்கு கிழக்கு தமிழ்மக்களின் எதிர்பார்ப்புக்களும் ஒன்றல்ல. இரண்டையும் நாம் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்க முடியாது. இலஞ்சத்தையும் ஊழலையும் அகற்றால் தமிழ்மக்கள் நிம்மதியாக வாழமுடியுமா. அல்லது அதனை மாத்திரம் நாம் மாற்றம் என்று கூறமுடியுமா?

இன்று வடக்கு கிழக்கு தமிழர் பகுதிகளில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இனப்பரம்பல் செயற்பாடுகள் தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தில் பாரியைத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமகாலத்தில் திருகோணமலை அம்பாறை ஆகிய மாவட்டங்களில் ஒரு தமிழ் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதே கடினம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

வன்னி மாவட்டத்திலும் இந்த நிலையை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் திரைமறைவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எனவே, தமிழ்மக்களின் இருப்பையும் பிரதிநிதித்துவத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம் அனைவர் முன்னும் இருக்கிறது. இது தொடர்பாக நாம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

ஏற்கனவே அதிகளவான தமிழ்மக்கள் புலம் பெயர்ந்து சென்றுள்ளமையால் தமிழ் பிரதிநிதித்துவம் குறைவடைந்து செல்லும் நிலைமையை காண்கின்றோம். இந்நிலையில் மாற்றத்தை விரும்பி நீங்கள் அளிக்கின்ற வாக்குகளால் எமது பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து சிங்கள பிரதிநிதிகளே நாடாளுமன்றுக்கு செல்வர். அவர்களுக்குத் தமிழர்களின் பிரதான பிரச்சினைகளே தெரியாது. அவர்கள் எமக்காகப் பேசுவார்கள் என நம்பமுடியுமா.

நாம் ஈழவிடுதலை போராட்டத்தில் எத்தனை ஆயிரம் போராளிகளை இழந்துவிட்டோம். எத்தனை உயிர்களை இழந்திருக்கின்றோம். பலர் அங்கவீனமுற்று அநாதைகள் ஆக்கப்பட்டுள்ளனர். பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இனப்பிரச்சினைக்கு தீர்வில்லை.

இவை தொடர்பாக சிங்கள பிரதிநிதிகளால் நாடாளு மன்றில் குரல்கொடுக்க முடியுமா. இல்லை. அல்லது சர்வதேசத்திற்குத்தான் தெரியப்படுத்த முடியுமா?

இந்த நிலைமையில் நாம் தேசிய கட்சிகளுக்கு அளிக்கின்ற வாக்கானது அவர்களின் தியாகத்தைக் கொச்சைப்படுத்துவதுடன் 50 வருடங்களுக்கு மேலாக நீடித்துவரும் விடுதலை வேட்கையை நீர்த்துப்போகச்செய்யும் நிலையை ஏற்படுத்தும்.

எனவே தெற்கில் ஏற்பட்ட மாற்றத்திற்கான அலையில் தமிழ்மக்கள் சிக்கிவிடாது தமிழ்ப்பிரதேசங்களின் இருப்புக்களையும், பிரதிநிதித்துவத்தையும் பாதுகாக்கவேண்டிய அவசியத்தை உணரவேண்டும்.

தமிழ்மக்களின் குரலாக ஓங்கி ஒலிக்கும் பிரதிநிதிகளை நாடாளுமன்றுக்கு அனுப்பவேண்டிய அவசியம் தொடர்பில் தாயக மக்களும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் சொந்தங்களும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

தொடர்ச்சியான தேர்தல்களில் வடக்கு கிழக்கு தமிழ்மக்கள் சலுகை அரசியலை புறந்தள்ளி உரிமை அரசியலைப் பேசுகின்ற தமிழ்த்தேசிய கட்சிகளுக்கே தமது ஏகோபித்த ஆதரவினை வழங்கிவந்திருக்கின்றனர்.

எனவே, இந்த தேர்தலிலும் தடம்மாறாது தமிழ்த்தேசியத்தின் இருப்பை பாதுகாப்பதற்கு ஒற்றுமையோடு அணிதிரளவேண்டுமென்று தமிழ்மக்களிடம் கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.(05)

# சுன்னாகம் லயன்ஸ் கழக ஏற்பாட்டில் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம்

சுன்னாகம் லயன்ஸ் கழகம், சுன்னாகம் லியோ கழகம், வாழ்வக சமூகம் என்பன இணைந்து சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வும் விழிப்புணர்வு நடைபவனியும் இன்று(வியாழக்கிழமை) காலை 8.30 மணிக்கு சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க முன்றிலில் இருந்து பேரணி ஆரம்பமாகி சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையத்தை அடைந்து அங்கு வாழ்வகத் தலைவரின் விழிப்புணர்வு உரை இடம்பெற்று மீண்டும் சுன்னாகம் சந்தியை அடைந்து வாழ்வகம் வரை சென்றடையும்.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் த.அகிலன், வாழ்வகம் விழிப்புலனற்றோர் இல்லத் தலைவர் ஆ.இரவீந்திரன் ஆகியோர் இணைத் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் லயன் ம.மயூரதன் பிரதம விருந்தினராகவும், சுன்னாகம் லயன்ஸ் கழக சிரேஷ்ட உறுப்பினர் லயன் ந.சண்முகவேல் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் விருந்தினர்களில் ஒருவராகக் கலந்துகொண்டு பார்வையற்ற வாழ்வக சிறார்களுக்கு வெள்ளைப்பிரம்புகளை வழங்கிவைப்பார்.

இந்த நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர்கள், சுன்னாகம் லியோ கழக உறுப்பினர்கள், வடபகுதி லயன்ஸ் கழக உறுப்பினர்கள் மற்றும் வாழ்வக சமூகத்தினர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர் வேண்டிநிற்கின்றனர்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவி விஞ்ஞான ஒலிம்பியாட்டில் முதலிடம்



கல்வி அமைச்சால் நடாத்தப்பட்ட தேசிய விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் பிரிவு 8/9 மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவி நயோலின் அபிறியானா அன்ரோனியோ குபேரக்குமார் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டுள்ளார்.

இவர் யாழ். இந்து கல்லூரியில் நடைபெற்ற மாகாண மட்ட போட்டியில் முதலாம் இடத்தையும், மகரகம ஜனாதிபதி கல்லூரியில் 03-08-2024 இல் நடைபெற்ற தேசிய மட்ட போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று வரலாற்று சாதனையை எமது மாவட்டத்திற்கும், மாகாணத்துக்கும், பெருமையை பெற்றுத்தந்துள்ளார்.

இவர் 2018 ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் நடைபெற்ற ஆங்கில மறுமொழி போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.(05)

# வனப்பகுதிக்கு விறகுவெட்ட சென்ற ஒருவரை காணோம்

*கித்துல்உத்துவ வனப்பகுதியில் விறகு வெட்டச் சென்ற மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் காணாமல் போயுள்ளார் என அக்போபுர பொலிஸார் தெரிவித்தனர்.*

*அக்போபுர, கித்துல்உத்துவ பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே காணாமல் போயுள்ளார்.*

*காணாமல் போனவர் கடந்த 13 ஆம் திகதி அன்று கித்துல்உத்துவ வனப்பகுதியில் விறகு வெட்டுவதற்காகச் சென்றுள்ள நிலையில் மீண்டும் வீடு திரும்பவில்லை என காணாமல் போனவரின் மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.*

*இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்போபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)*

# ஒரு வாக்காளருக்காக செலவிடக்கூடிய அதி உச்சத் தொகை எவ்வளவு ரூபாய்?

## கட்சிகளின் செயலர்களுடன் தேர்தல்கள் ஆணைக்குழு ஆய்வு

தேர்தல் பிரசார செலவினங்கள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் சகல அரசியல் கட்சிகளும், சுயேச்சை வேட்பாளர்களும் அவர்களது தேர்தல் பிரசார நடவடிக்கைகளின்போது ஒரு வாக்காளருக்காக செலவிடக்கூடிய அதியுச்ச தொகையை நிர்ணயிப்பதற்கான ஆலோசனை கலந்துரையாடல்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவால் நடத்தப்பட்டது.

இதில் கலந்துகொண்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் அதியுச்ச தொகை குறித்த ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளித்தனர்.

பொதுத்தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தல் மற்றும் வேட்புமனுத்தாக்கல் என்பன கடந்த வெள்ளிக்கிழமை நண்பகலுடன்முடிவுக்குவந்தது. தேர்தல்பிரசாரசெலவினங்கள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரகாரம் வேட்புமனுத்தாக்கல் முடிவுக்குவந்து 5 நாள்களுக்குள் தேர்தல்கள் ஆணைக்குழு அரசியல்கட்சிகள்மற்றும்சுயேச்சைவேட்பாளர்கள்ஒவ்வொரு வாக்காளருக்கும் செலவிடவேண்டிய அதியுச்ச தொகை எவ்வளவு என்று நிர்ணயித்து, அதனை வர்த்தமானியில் வெளியிடவேண்டும்.

அதேபோன்று அத்தொகையை நிர்ணயிப்பதற்கு முன்னதாக தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை வேட்பாளர்களிடமிருந்து இவ்விடயம் தொடர்பில் ஆணைக்குழு ஆலோசனை பெற்றுக்கொள்ளவேண்டும்.

அதற்கமைய ஒவ்வொரு மாவட்ட வாரியாக தேர்தல் பிரசார செலவினம் தொடர்பில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை வேட்பாளர்களின் பரிந்துரைகளை தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே திரட்டியிருந்தது.

அதேவேளை கொழும்பு மாவட்டத்தில் ஒவ்வொரு வாக்களாளருக்கும் செலவிடப்படவேண்டிய அதியுச்ச தொகை குறித்த பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் தேர்தல்கள் ஆணைக்குழு செவ்வாய்கிழமை எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் சகல அரசியல் கட்சிகளினதும் செயலாளர்களுடன் சந்திப்பொன்றை நடத்தியிருந்தது. இச்சந்திப்பின்போது பிரசார செலவினங்கள் தொடர்பில் அக்கட்சிகளின் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

இவ்வாறு நாட்டின் சகல தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் திரட்டப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு, அந்தந்த மாவட்டங்களின் சனத்தொகை, பூகோள அமைவிடம் மற்றும் செலவினங்கள் ஆகியவற்றை மையப்படுத்தி தேர்தல்கள் ஆணைக்குழுவால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருக்கும் செயன்முறை ஊடாக ஒரு வாக்காளருக்கு செலவிடப்படவேண்டிய அதியுச்ச தொகை கணிப்பிடப்படும். இத்தொகையானது மேற்கூறப்பட்ட காரணிகளின் அடிப்படையில் மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபடும்.

அதன்படிஎதிர்வரும்நவம்பர்மாதம்14ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் சகல அரசியல் கட்சிகளும், சுயேச்சை வேட்பாளர்களும் பிரசார நடவடிக்கைகளின்போதுஒருவாக்காளருக்காக செலவிடவேண்டிய அதியுச்ச தொகையின் சராசரியானது பெரும்பாலும் 109 - 110 ரூபா என்ற மட்டத்தில் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தொகை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் வேறுபடும் என்பதால், கொழும்பு உள்ளிட்ட சனத்தொகை மற்றும் செலவினங்கள் கூடிய தேர்தல் மாவட்டங்களுக்கான அதியுச்ச தொகை அண்ணளவாக 110 - 120 ரூபா வரையும், வன்னி போன்ற சனத்தொகை மற்றும் செலவினங்கள் குறைந்த தேர்தல் மாவட்டங்களுக்கான அதியுச்ச தொகை அண்ணளவாக 80 - 100 ரூபா வரையும் நிர்ணயிக்கப்படக்கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன.(05)




# சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பதவிக்கு ரஜீவ் அமரசூரிய போட்டி



இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 2025/2026 ஆம் ஆண்டுக்கான தலைவர் பதவிக்கு, மாசி மாதம் 2025 இல் திட்டமிடப்பட்டுள்ள தேர்தலில் சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய போட்டியிடவுள்ளார்.

அமரசூரிய 2020ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 83% வாக்குகள் பெற்று பெரும்பான்மையுடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்க செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் 2020 பங்குனி 28ஆம் திகதி நடைபெறவிருந்த இலங்கை சட்டத்தரணிகள் சங்க வருடாந்த மாநாட்டில் 24வது செயலாளராக பொறுப்பேற்கவிருந்த நிலையில், ளீலிஸஷ்--19 பெருந்தொற்றால் ஏற்பட்ட முதலாவது ஊரடங்கின் போது தனது பதவியை ஆரம்பிக்க நேர்ந்தது.

2020-2022 காலப்பகுதியில் செயலாளராக கடமையாற்றிய அமரசூரிய, பெருந்தொற்றும் பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்ட இக்கட்டான காலத்தில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு தனது பன்முகத் திறன்களை கொண்ட தலைமைத்துவத்தை வழங்கியமைக்காக அவருக்கு பல பாராட்டுக்கள் கிடைத்திருந்தது.

நவீன தொழில்நுட்பம் மற்றும் புதுமையான முறைகளைப்பயன்படுத்தி பலபுதிய முயற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தியதுடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் வழமையான செயல்பாடுகளை முற்றிலும் மாற்றியமைத்ததோடு, சிறப்பாக வழிநடாத்தினார்.

மேலும் அவர் தொடர்ச்சியான சட்டக் கல்வி மற்றும் தொழில்முறை மேம்பாட்டிற்கான புதிய திட்டங்களை அமுல்படுத்தியதற்காக அதிகளவில் பாராட்டப்பட்டார்.

இதன் மூலம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சேவையானது தேசிய மட்டத்தில் அனைத்து உறுப்பினர் களிடமும் அவர்களின் இருப்பிடத்தை பொருட்படுத்தாமல் சென்றடைந்தது.

அவர் இலங்கை சட்டத்தரணிகள் சங்க இணையவழி கருத்தரங்குதொடரைமூன்றுமொழிகளிலும்அறிமுகப்படுத்தி நடத்தியதோடு 500க்கு மேற்பட்ட வளவாளர்களின் பங்களிப்புடன் 175 இணையவழி கருத்தரங்குகளை இரண்டாண்டு காலத்தில் சிறப்பாக நிறைவேற்றினார்.

இக்கருத்தரங்குகள் இன்றுவரை இலங்கை சட்டத்தரணிகள் சங்க கூழலிற்வீற்னுள தளத்தில் பொதுமக்கள் பாவனைக்கென வெளிப்படையாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

அவர் இலங்கை சட்டத்தரணிகள் சங்க இணையவழி சான்றிதழ்கற்கைநெறிகளை அறிமுகப்படுத்தியதுடன்அதன் மூலம்சுமார்2,000உறுப்பினர்கள்பயனடைந்திருந்தார்கள்.

குறித்த காலத்தில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கமானதுஇதன்மூலம்மிககணிசமானவருமானத்தையும் ஈட்டிக்கொள்ள கூடியதாக இருந்தது. அத்துடன் பல்வேறு இதர புதிய முயற்சிகளும் அவரது பதவிக் காலத்தில் சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டன.

தற்போது, அவர் மேல்முறையீட்டு நீதிமன்றங்களில் பொதுவுடைமை சட்டம் மற்றும் பல்வேறு குடியியல் வழக்குகளில் ஆஜராகி சுயாதீன சட்டத்தரணியாக செயல்படுகிறார். அத்துடன், பரந்துபட்ட ரீதியில் பல்வேறு குடியியல் மற்றும் வணிகத் துறைகளில் சட்ட ஆலோசனைகளையும் வழங்குகின்றார்.

அமரசூரிய இந்த ஆண்டின் தொடக்கத்தில் அரசமைப்பு பேரவையின் ஒப்புதலுடன் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் சபை (ஹ்ரலிஸஎஷஜஷ்ஜஆ யலிழிஷ- லிகூஷ மிஜூஎ ளீஎஜமிஷழியி யழிஜவ லிகூஷ ரீஷஷ் ஸிழிஜவழி கூஷலிஷதுஎஷயிதீ னிலிஜஎமிழிஷதீ யலிழிஷ-) மற்றும் அதன் நாணயக் கொள்கைச் சபை (னிலிஜஎமிழிஷதீ ஊலியிஷ்உதீ யலிழிஷ-) ஆகியவற்றின் உறுப்பினராக திகழ்கின்றார்.

அமரசூரிய வலிமையான, சுயாதீனமான, அடிப்படைக் கொள்கைகளைத் சார்ந்த மற்றும் கண்ணியத்தன்மை வாய்ந்த ஒரு சட்டத்தரணிகள் சங்கத்திற்கு துணை நிற்பார். (95)

# நிதிமோசடி குற்றச்சாட்டு தொடர்பில் பொலிஸாரின் விசாரணை ஆரம்பம்

## மட்டு. வைத்தியசாலை கூட்டுறவு நலன்புரிச் சங்க

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை கூட்டுறவு நலன்புரி சங்கத்தில் கடந்த 5 வருடங்களாக இடம்பெற்றுள்ள 58 லட்சத்து 5 ஆயிரத்து 853 ரூபா நிதி மோசடி தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு மாவட்ட விசேட நிதி மோசடி விசாரணை பிரிவு பொலிஸார் மேற்கொண்டுவருவதாகத் தெரிவித்தனர்.குறித்த கூட்டுறவு சங்கத்தின் புதிய நிர்வாகம் 2024 ஆம் ஆண்டு பெறுப்பேற்றதையடுத்து நிதி தொடர்பாக ஆராய்ந்தபோதுநிதிமோசடிஇடம்பெற்றுள்ளமை கண்டறியப்பட்டதையடுத்து அப்போது சங்கத்தின் பொருளாளராக இருந்தவருக்கு எதிராக மாவட்ட விசேட நிதி மோசடி விசாரணை பிரிவு பொலிஸாருக்கு புதிய நிர்வாகம் முறைப்பாடு செய்ததையடுத்து இந்த மோசடி தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது இந்த சிக்கன நலன்புரி சங்கத்தில் வைத்தியசாலையில் கடமையாற்றும் சுமார் ஆயிரம் பேருக்கு மேலாக உறுப்பினர்களாக இருப்பதுடன் மாதாந்தம் சம்பளத்தில்ஆயிரம்ரூபாவைசந்தாபணமாக செலுத்திவருகின்றனர்.

இந்த நிலையில் வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் ஆண் பரிசாதகர் (அற்றன்டன்) கூட்டுறவு நலன்புரி சங்கத்தில் பொருளாளராக பெறுப்பேற்று 2019 தொடக்கம் 2023 வரையான காலப்பகுதிவரை கடமையாற்றி வந்துள்ளதுடன் சங்க நிர்வாகத்தில் கடமையாற்ற வைத்தியசாலையை விட்டு வெளியாள் ஒரு பெண் ஒருவரை நியமித்து மாதாந்த சம்பளத்துக்கு கடமைக்கு அமர்தப்பட்டுள்ளார்.

இதன்போது பொருளாளர் சங்கத்தின் உறுப்பினர் பலரின் பெயரில் அவர்களுக்கு தெரியாமல்கடன் விண்ணப்பங்களைபூர்த்தி செய்து கடன் பெற்று பணத்தை மோசடி செய்து வந்துள்ளார்.

இவ்வாறு பொருளாளர் அவரது உதவிக்கு நியமித்த பெண் ஆகியோர் கடந்த 5 வருடத்தில் 58 லட்சத்து 5 ஆயிரத்து 853 ரூபா நிதி மோசடி செய்துள்ளனர் என மாவட்ட விசேட நிதி மோசடி விசாரணைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பல விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மோசடியில் ஈடுபட்ட சங்கத்தின் முன்னாள் பொருளாளர் மோசடி செய்த பணத்தில் 39 லச்சம் ரூபா பணத்தை திரும்ப ஒப்படைத்துள்ளதுடன் அவருடன் சேர்ந்து மோசடியில்ஈடுபட்ட அங்கு கடமையாற்றிவந்த பெண் 19 லச்சம் ரூபாவை இதுவரை ஒப்படைக்கவில்லை.

இருந்தபோதும் இந்த பாரிய நிதி மோசடி தொடர்பான மேலதிக விசாரணைகளை விசேட நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் மேற்கொண்டு வருவதுடன் இந்த மோசடியில் ஈடுபட்டவர்களை கைது செய்து இவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடர்வதற்கான நடவடிக்கைகளைமுன்னெடுத்துவருகின்றனர்.

இதேவேளை வைத்தியசாலையில் இயங்கிவரும் இன்னொரு கூட்டுறவு சங்கத்தில் கோடிக்கணக்கான பண மோசடி இடம்பெற்றுள்ளதாகவும் கூட்டுறவு நலன்புரி சங்கத்தில் பொருளாளராக இருந்து மோசடி செய்தவர் அந்த சங்கத்தில் இருந்துள்ளார் எனவும்சங்கயாப்பின்படிகடந்தஜூலைமாதம் சங்க பொதுக் கூட்டம் கூட்டப்படவேண்டியது இன்னமும் கூட்டாமல் இருக்கின்றதாக சங்க உறுப்பினர்கள் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# மாடியிலிருந்து கீழே தவறி விழுந்து கட்டடப் பொறியாளர் உயிரிழப்பு

பன்னிப்பிட்டிய ஹிரிபிட்டிய, போகஹவில பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் மேல் மாடியிலிருந்து கீழே தவறி விழுந்து கட்டடப் பொறியாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என ஹோமாகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

பன்னிப்பிட்டிய ஹிரிபிட்டிய, போகஹவில பிரதேசத்தைச்சேர்ந்த 41வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது -


உயிரிழந்தவர் தனது இரண்டு மாடி வீட்டில், நீர் கசிந்துள்ள இடங்களில் கூரைத் தகடுகளை சரி செய்து கொண்டிருந்த போது இருபத்தைந்து அடி உயரத்தில் இருந்து கீழே தவறி விழுந்து காயமடைந்துள்ளார்.

இந்நிலையில், கட்டடப் பொறியாளர் கீழே வீழ்ந்து கிடப்பதை கண்ட அயல் வீட்டு பெண் ஒருவர் இது தொடர்பில் கட்டடப் பொறியியலாளரின் மனைவியிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, அவரைக் ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.(05)

# யாழில் நகைகள் திருடிய குற்றச்சாட்டில் ஐவர் கைது





யாழ்ப்பாணம்சாவகச்சேரிப்பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை மூலம் 25 இலட்சம் ரூபா பெறுமதியான 16 பவுண் தங்க நகைகள் மீட்கப்பட்டிருப்பதுடன் ஐந்து சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த பத்தாம் திகதி சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெருடாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் பகல் வேளையில் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்த 16 பவுண் நகைகள் மற்றும் தொலைபேசி ஆகியவற்றை கொள்ளையிட்டுத் தப்பித்திருந்தனர்.

கணவன் - மனைவி இருவரும் பணிக்குச் சென்று வீடு திரும்பிய நிலையிலேயே வீட்டில் திருட்டு இடம்பெற்றிருப்பது கண்டறியப்பட்டு அது தொடர்பில் பாதுகாப்புக் கமராவின் ஆதாரத்துடன் சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந் நிலையில் விரைந்து செயற்பட்ட பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை திருட்டுச் சந்தேக நபர்களான இரண்டு பெண்கள் மற்றும் நகைகளைப் பெற்றுக் கொண்ட வர்த்தகர்கள் இருவர் உட்பட ஐவரைக் கைது செய்திருந்தனர்.

அத்தோடு உருக்கப்பட்ட நிலையில் நகைகளும் - திருட்டுச் சந்தேக நபர்களான பெண்களிடம் இருந்து நகை விற்ற 7 லட்சம் ரூபா பணம் மற்றும் நகை விற்ற பணத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆடம்பர மின்உபகரணங்களும்கைப்பற்றப்பட்டுள்ளன.

(05)



## மலையகத்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் யார்? புரொடொப் தோட்டப் பகுதியில் முகாமையாளராக இருந்து மக்களை தாக்கி தொழிற்சாலையில் அடைத்துவைத்திருந்தவர். கடந்த ஏழு வருடங்களுக்கு முன்பு நாங்கள்தான் சென்று அம்மக்களை விடுவித்தோம். அவர் போன்ற ஒருவருக்காக மலையகத்தில் சிலர் கொடி உயர்த்திக்கொண்டு ஆதரவு வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள்.

எமக்குக் கிடைத்த வளங்களை வைத்து மாத்திரம் வேலைசெய்ய முடியுமே தவிர வளங்களை உருவாக்க முடியாது. நாடு வங்குரோத்து அடைந்தபோது கூட மலையகத்தை பொருத்தவரையில் இரண்டு சம்பள உயர்வுகளை பெற்றுக்கொடுத்துள்ளோம்.

ஆரம்பகாலம் முதல் நான் சொல்லிவருவது எம்மிடம் இருப்பது 10 ஆயிரம் வீடுகள். ஆனால் 10 ஆயிரம் வீடுகளை வைத்து ஆறு அரசியல்வாதிகள் ஒன்றரை இலட்சம் பேரை எமாற்றிக்கொண்டு வருகிறார்கள்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வாக்குகளுக்காக வதந்திகளை பரப்பாது. கோட்டாபய ராஜபக்ஸ ஆட்சி அமைக்கும்போது அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து கட்சிகளும் இல்லாமல் போயுள்ளன. நாட்டை மீட்டெடுத்த முன்னாள் ஜனாதிபதி ரணிலை மக்கள் தூக்கி எறிந்து விட்டார்கள். அதேபோல் எம்மையும் தூக்கிப் போடாமல் இருந்தால் சரி.

இதற்குப் பிறகு சம்பள உயர்வு எந்த அடிப்படையில் கிடைக்கும் என்பதைப் பற்றி எனக்குக் கூறமுடியாது. பொருளாதார நெருக்கடியின் மத்தியில் உதவி ஆசிரியர் நியமனத்தை பெற்றுக்கொடுத்தோம். மலையக மக்களுடைய வாக்குகளை சிதறடிக்க முயற்சி செய்கின்றனர். குடும்ப அரசியலுக்கு எதிர்ப்பு என கூறியவர்கள் களுத்துறை மாவட்டத்தில் தந்தையும் மகனுமாகப் போட்டியிடுகின்றனர் என்றார்.

## விருப்பு....

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மாவட்டத்திலேயே போட்டியிடுகின்றனர். அங்கு 966 பேர் களத்தில் உள்ளனர்.

## பொலிஸ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டவர் பெருமளவில் ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டு வந்த மட்டக்குளி, சமித்புர பிரதேசத்தை சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர் ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டதன் காரணமாக ஏற்கனவே 12 வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவித்தவர், ஒரு மாதத்திற்கு முன்னரே விடுதலை பெற்றார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## பொதுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைக்குச் செல்கின்றபோது அதனை வெளிப்படுத்தி, வழிப்படுத்த வேண்டிய அனுபவம் எமக்குள்ளது.

எவ்வாறாக இருந்தாலும் ஆட்சியாளர்கள் ஆட்சி செய்வதை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட வேண்டும். நாம் எமது பொறுப்புக்களை புறந்தள்ளிச் செயற்பட முடியாது. அதுதான் தேர்தல்.

தேர்தலை நடத்துவதற்கான பொறுப்பு எம் அனைவருக்கும் உள்ளது. தேர்தலை நடத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுவின் தனிப்பட்ட பொறுப்பாகும். பிரஜைகள் என்ற வகையில் எம் அனைவரினதும் பொறுப்பு அதுவாகவே உள்ளது.

பொதுத்தேர்தலில் பின்னர் உள்ளாட்சித் தேர்தலை முன்னெடுக்க வேண்டும். அதன் பின்னர் புதிய அரசியலமைப்பு உருவாக்கச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாது விட்டால் நாம் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதை நோக்கிச் செல்லவேண்டும்

ஆரம்பித்த பணிகளைத் தொடர்ந்து முன்னஜடுத்துச் செல்வதற்கு நாம் தயாராகவே உள்ளோம். அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

## அமெ. கடற்படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் ஆராய்ச்சிகளில் வெளியானதாக சுட்டிக்காட்டியுள்ளது. எனவே ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் போத்தல்களை மீண்டும் பயன்படுத்துவதை தவிர்க்குமாறு பொதுமக்கள்ளுக்கு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

குடிநீரை போத்தலில் அடைத்து விற்பனை செய்யும் நிறுவனங்களின் அதிகாரிகள், பெரிய பிளாஸ்டிக் போத்தல்களை மீண்டும் பயன்படுத்தும்போது முறையான பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

உலர்வலயப் பகுதிகளில் நீர் சேமிப்புக்காக பொதுவாகப் பயன்படுத்தப்படும் 19 லிட்டர் பிளாஸ்டிக் போத்தல்களுக்கு இது மிகவும் முக்கியமானது.

இந்த போத்தல்களை மீண்டும் பயன்படுத்துவது ஆரோக்கியத்திற்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும், பொது சுகாதாரத்தை உறுதிப்படுத்த பாதுகாப்பு நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பது முக்கியம் என்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவு வலியுறுத்தியுள்ளது.

## தேசிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களின் மனநிலையை நாம் உணர்கின்றோம்.

போரால் 28 ஆயிரம் சிறுவர்கள் தமது தந்தை, தாய் இல்லாது தனியாக வாழும் நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. இதுபோன்ற பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டே தீர்வு காண வேண்டும்.

அதற்காக வடக்கு மக்கள் தேசிய மக்கள் சக்தியை பலப்படுத்தவேண்டும். அதற்காக மக்கள் பிரதிநிதி ஒருவரைத் தெரிவு செய்யவேண்டும். அவர்களுக்கான அங்கீகாரத்தினை வழங்கவேண்டும். நாம் ஒருபோதும் முன்னாள் அமைச்சர்களை எம்முடன் இணைத்துக்கொள்ளப்போவதில்லை என்றார்.

## மருந்துகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியூபா தொடர்ச்சியாக இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்துக்கொண்ட பிரதமர், கியூபா பிரதமர் இலங்கைக்கு வரவேண்டுமென்ற உத்தியோகபூர்வ அழைப்பையும் விடுத்தார்.

பிரதமரின் செயலாளர் பிரதீப் சப்புதந்த்ரி, பிரதமரின் மேலதிக செயலாளர் மஹிந்த குணரத்ன, கியூபா அரசை பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட அதிகாரிகள் முதலானோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை

# விடைத்தாள் மதிப்பீட்டு பணி பரிந்துரைக்காக காத்திருப்பு

சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை மனித உரிமைகள் ஆணைக்குழு வழங்கும் பரிந்துரைகளின் பின்னர் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விடைத்தாள் மதிப்பீட்டிற்கான அனைத்து நடவடிக்கைகளும் தயார்படுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாளின் மூன்று கேள்விகள் பரீட்சைக்கு முன்னதாகவே கசிந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணை நடத்திவரும் நிலையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் புள்ளிகள் மற்றும் வெட்டுப்புள்ளிகளை வெளியிடுவதற்கு இடைக்காலத் தடை விதிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் பெற்றோர் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்துள்ளனர்.

# ஹிருணிகாவுடன் பேச்சு

*கட்சியின் மகளிர் அமைப்பின் பொறுப்பிலிருந்து விலகுவது தொடர்பில் ஹிருணிகாவுடன் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது, அவர் அந்தப் பதவியில் தொடர்வதையே கட்சி விரும்புகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.*

*கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.*

*அவர் மேலும் தெரிவித்ததாவது:*


*ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அமைப்பின் அமைப்பாளர் பொறுப்பிலிருந்து பதவி விலகுவதாக அறிவித்துள்ள ஹிருணிகா பிரேமச்சந்திரவுடன் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது.*

*அவர் அந்தப் பதவியைத் தொடரவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக உள்ள. அது பற்றிய கலந்துரையாடல்கள் ஊடாகத் தீர்மானம் ஒன்றை எடுப்போம். அவர் அந்தப் பதவியை தொடர்வார் என்ற நம்பிக்கை எமக்குள்ளது என்றார். இதேவேளை, குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ஹிருணிகா, நான் எனது முடிவினை மாற்றவில்லை. பதவி விலகல் கடிதத்தினை சமர்ப்பித்துள்ளேன். அது சம்பந்தமாக கட்சியின் தீர்மானத்தினை எதிர்பார்த்துள்ளேன். கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன. கட்சியின் தலைமையை, ஏனையவர்களை சங்கடத்துக்கு உள்ளாக்குவது எனது நோக்கமல்ல. ஆனால் பதவி நிலையற்றவர்கள் கட்சியில் ஆதிக்கம் செலுத்துவதற்கு இடமளிக்க முடியாது என்றார்.*



காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு பல்கலை துணைவேந்தர் தெரிவில் பேராசிரியர் கனகசிங்கம் முன்னிலையில்



மட்டக்களப்பு வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கான தெரிவில் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றிருக்கிறார்.

தற்போதைய துணைவேந்தரின் பதவிக் காலம் எதிர்வரும் ஜனவரி 21 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், அந்தப் பல்கலைக்கழகத்தின் பதிவாளரால் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விசேட பேரவைக் கூட்டத்தில் தமது எதிர்காலத் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தனர். அதனைத் தொடர்ந்து பேரவை உறுப்பினர்கள் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்து புள்ளிகளை வழங்கினர்.

பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் முதல் நிலையிலும், சுகநல விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தில்லைநாதன் சதானந்தன், விஞ்ஞான பீடத்தின் பௌதிகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபன் ஆகியோர் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளனர்.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களைத் தெரிவு செய்வதற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின்படி, புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரங்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

பல்கலைக் கழகச் சட்டத்தின் படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரை துணைவேந்தராக ஜனாதிபதி தெரிவு செய்து, நியமனம் செய்வார்.(05)

# கொத்தலாவ வடிகான்களை நேரடியாக பார்வையிட்டார் யாழ். மாவட்ட செயலர்





ஆறுகால்மடத்தடியில் அமைந்துள்ள குருசுமதவடி வடிகானின் நிலைமை தொடர்பாகவும் அதனைத் தொடர்ந்து மானிப்பாயில் அமைந்துள்ள கொத்தலாவ வடிகான் நிலைமைகள் தொடர்பாகவும் மாவட்ட செயலாளர் பிரதீபன் செவ்வாய்க்கிழமை நேரடியாக பார்வையிட்டார்.

மேற்படி இருவடிகால்களையும் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுடன் அரசாங்க அதிபர் பார்வையிட்டு, டெங்கு நோய் வராமல் தடுப்பதற்கான முன்னேற்பாடுகள், மழைநீர் தேங்கி நிற்பதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கான முன்னேற்பாடுகள், வடிகாலின் நீரோட்டம் மற்றும் துப்புரவு சம்பந்தமான விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஊடாகஎடுப்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்கினார்.

மேலும் இதன் முன்னேற்றங்களை அடுத்துவரும் டெங்கு கட்டுப்பாடுக் கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்.

இக் களஆய்வில் நல்லூர் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், நல்லூர் மற்றும் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர், யாழ் மாநகரசபை ஆணையாளர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளர், நல்லூர் மானிப்பாய் பிரதேச சபைகளின் செயலாளர்கள், மாநகர சபை, மற்றும் பிரதேச சபைகளின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பொது சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.(05)

# சந்தர்ப்பவாதிகளையும் மக்கள் சேவகர்களையும் இனங்காணும் நேரம் இது என்கின்றார் ரங்கன்




சந்தர்ப்பவாதிகளையும் மக்கள் சேவகர்களையும் இனங்காணும் நேரம் இது தமிழ் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளரும் வேட்பாளருமான சிறீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிடைத்திருக்கும் உரிமைகளையும் இல்லாமல் செய்யும் போக்கிலேயே சக தமிழ் கட்சிகளின் செயற்பாடுகள் அமைந்து வருகின்றன.

எம்மை பொறுத்தளவில் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற நிலைப்பாட்டுக்கமையவே எமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இம்முறை ஈ.பி.டி.பி 7 தேர்தல் மாவட்டங்களை உள்ளடக்கிய 10 மாவட்டங்களில் போட்டியிடுகின்றது. அத்துடன் நடைபெறவுள்ள தேர்தல் என்பது தமிழ் மக்களுக்கு மிக முக்கியமானது.

ஏனெனில் எவர் சந்தர்ப்பவாத அரசியலை முன்னெடுக்கின்றார்கள், எவர் மக்களது சேவகர்களாக இருந்து செயற்படுகின்றார்கள், எவர் சுயநலன்களுக்காக செயற்படுகின்றார்கள் என்பதை மக்கள் நிர்ணயிக்கின்ற தேர்தலாக இது இருக்கின்றது. ஏனெனில் மக்கள் தற்போது உண்மையை கண்டுகொண்டுவிட்டனர்.

எமது அரசியல் செயற்பாடுகளையும் நாம் முன்னெடுக்கும் பொறிமுறைகளையும் நாம் வெளிப்படையாகவே கூறுகின்றோம். இதை மக்கள் ஏற்று அணிதிரண்டு எமது சின்னமான வீணைக்கு வாக்களித்து எம்மை அரசியல் பலம் மிக்கவர்களாக்குவாரகள் என நம்புகின்றோம்.

தற்போது மக்கள் எம்மை உன்னிப்பாக அவதானிக்க தொடங்கியுள்ளார்கள். இதனடிப்படையில் இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் மக்கள் எமக்கு 7 ஆசனங்களை பெறுவதற்கான ஆணையை தருவார்கள் என நம்புகின்றோம். மக்களது ஆணையே எமது நிலைப்பாடாகவும் உள்ளது. - என்றார்.(05)

# சீனர்களின் கைதால் மரியாதை போகிறது

## சீனத் தூதரகம் கவலை

இலங்கையுடன் இணைந்து மோசடி எதிர்ப்பு சட்டங்களை அமுலாக்குவதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு ஆழ்ந்த கரிசனைகளைக் கொண்டுள்ளதாக சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சீனத் தூதரகம் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சீனப் பிரஜைகள் உட்பட பல வெளிநாட்டு சந்தேகநபர்களை இலங்கை பொலிஸார் கைது செய்ததாக அண்மையில் வெளியான செய்திகளை சீனா உன்னிப்பாக அவதானித்து வருகிறது. இச்சம்பவங்கள் இரு நாட்டு மக்களின் சொத்துக்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பது மட்டுமல்லாமல், சீனா மீதான மதிப்பையும் கடுமையாகச் சேதப்படுத்துகிறது. அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையிலான பாரம்பரிய நட்பையும் பாதிப்பதாகவுள்ளது.

சந்தேகநபர்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாக்கும் அதேவேளையில் சட்டத்திற்கு உட்பட்டு சந்தேகநபர்கள் மீதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இலங்கை சட்ட அமுலாக்க முகவர் நிறுவனங்களுக்கு சீனத் தூதரகம் முழு ஆதரவையும் வழங்குகிறது.

தொலைத்தொடர்பு மற்றும் இணையவழி மோசடிகள் 1990 களில் சீனாவில் ஆரம்பமாகியிருந்தன. அதன் பின்னர் பெருமளவில் பரவலடைந்து நாட்டின் ஏராளமான குடிமக்களை பாதித்தது. சீன அரசாங்கம் மக்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையைக் கடைப்பிடிக்கிறது, தொலைத்தொடர்பு மற்றும் இணையவழி மோசடிக் குற்றங்களைத் தடுக்கும் பாதையைத் தொடர்ந்து ஆராய்ந்து, முன்னோடியான பல முயற்சிகளை முன்னெடுத்துச் செல்கின்றது.

இந்த நடவடிக்கைகள் மூலமாக 2021ஆம் ஆண்டில் சீனாவில் தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட ஐந்து மடங்கு அதிகமாகவுள்ளது. சீனாவில் இதுபோன்ற நிகழ்வுகள் ஜூன் 2021 முதல் கடந்த 17 மாதங்களில் வெகுவாகக் குறைந்துள்ளது.

உலகில், தொலைத்தொடர்பு மற்றும் இணையவழி மோசடிக் குற்றங்கள் பல்வேறு நாடுகளில் வேகமாக வளர்ந்து பரவி, உலகளாவிய பொதுவான ஆபத்தாகவும், தீர்க்க வேண்டிய உலகளாவிய பிரச்சினையாகவும் மாறியுள்ளன. சமீபத்திய ஆண்டுகளில் இத்தகைய மோசடிகளை எதிர்த்துப் போராட மியான்மர், கம்போடியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட பல நாடுகளுடன் சீனா பலனளிக்கும் ஒத்துழைப்பை மேற்கொண்டுள்ளது.

அதனடிப்படையில் மிகப்பெரிய குற்றக் கும்பல்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் சில குற்றவியல் குழுக்கள் தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பிற நாடுகளுக்குச் சென்றுள்ளமைக்கான தகவல்கள் உள்ளன.

தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு, புவியியல் அமைவிடம், சீனாவுடனான நட்புறவு போன்றவற்றில் இலங்கைக்கு உள்ள நன்மைகள் காணப்படுகின்றன. இதனை மையப்படுத்தியும் இலங்கை மக்களிடத்தில் இணையத்தள மோசடி தொடர்பில் போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தாலும் சில இலத்திரனியல் மோசடி குற்றக் கும்பல்கள் இலங்கைக்குள் உட்புகுந்து மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இலங்கையில் அதிகரித்துள்ள இந்தப்போக்குக்கு சீன அரசாங்கம் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. மேலும் இலங்கையில் இணையவழி மோசடி எதிர்ப்பு சட்ட அமுலாக்க ஒத்துழைப்பை சீனா ஆழமான கரிசனையுடன் ஊக்குவிக்கிறது.

தொலைத்தொடர்பு மோசடிகளை திறம்பட முறியடிப்பதற்கும் வலுவான தடுப்பை உருவாக்குவதற்கும், சீனாவின் பொதுப்பாதுகாப்பு அமைச்சு இலங்கை பொலிஸாருடன் இணைந்து விசேட நடவடிக்கையை மேற்கொள்வதற்காக கடந்த செப்ரெம்பர் மாதம் ஒரு செயற்குழுவை அனுப்பியிருந்தது.

அதனையடுத்து ஏராளமான குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். சீனாவின் இணையவழி குற்றங்களைத் தடுப்பதற்கான ஒத்துழைப்பு இப்போது தான் ஆரம்பித்துள்ள நிலையில் அது முழுமை பெறுவதற்கான செயற்பாடுகள் இன்னமும் வெகு தொலைவில் உள்ளன.

உலகமயமாக்கல் காலத்தில், எந்த நாடும் தனிமைப்படுத்தப்பட்டிருக்க முடியாது. சீனாவும் இலங்கையும் பாரம்பரிய நட்புறவைக் கொண்டிருக்கின்றன. பல்வேறு துறைகளில் மிக நெருக்கமான ஒத்துழைப்புக்களைக் கொண்டுள்ளன.

இரு நாட்டு மக்களுக்கும் நன்மைகளைக் கொண்டு வருவதற்காக இரு நாடுகளும் எப்போதும் பரஸ்பரம் ஆதரவளித்து வருகின்றன. இலங்கையுடனான சட்ட அமலாக்க ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தவும், இந்தப் பிரச்சினையைக் கூட்டாகக் கையாள்வதற்கும் விரைவான மற்றும் பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்கவும் சீனா தயாராக உள்ளது.

இலங்கை அரசாங்கம், பொலிஸார் மற்றும் மக்களிடத்தில் சீனா புரிந்துணர்வையும் ஆதரவையும் பெறுவதற்கு எதிர்பார்க்கின்றது. - என்றுள்ளது.(05)

# இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட இரு வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு

## கிளிநொச்சியில் நேற்று நடந்தது



கிளிநொச்சிபரந்தன்மற்றும்பன்னாங்கண்டி ஆகிய பகுதிகளில் இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட இரு வீடுகள் அதன் பயனாளிகளிடம் நேற்று காலை கையளிக்கப்பட்டன.



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பரந்தன் சிவபுரம் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட வருமானம் குறைந்த 05 பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடு, அதன் உரிமையாளரிடம் நேற்று காலை 9 மணிக்கு கையளிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, காலை 10மணியளவில்கரைச்சிபிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பன்னங்கண்டி கிராமத்தில் இராணுவத்தில் பணியாற்றும் கணவன் - மனைவி மற்றும் அவர்களுடன் சேர்ந்து வாழும் மாற்றுத்திறனாளியான தாய், தந்தையரை உள்ளடக்கிய குடும்பத்துக்கான வீடொன்றும் வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது இராணுவ உயரதிகாரிகள், இராணுவ பதவி நிலை உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், வீடுகளை பெற்றுக்கொண்ட பயனாளிகள், பொதுமக்கள் என பலர் இணைந்திருந்தனர். (05)

# அநுராதபுரம் பண்ணையில் 1,000 பன்றிகள் உயிரிழப்பு

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கால்நடைப் பண்ணைகளில் 1000 இற்கும் மேற்பட்ட பன்றிகள் வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளன. இதனால் அங்குள்ள பண்ணையாளர்கள் பெரும் சோகத்தில் உள்ளனர்.

பன்றிகள் அடையாளம் காணப்படாத வைரஸ் தொற்றுக்குள்ளாகி இரண்டே நாள்களில் உயிரிழந்துள்ளன. வைரஸ் தொற்று வேகமாக பரவி வருகிறது. தடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் மற்றைய பகுதிகளுக்கும் பரவும் அபாயம் உள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் 20 பண்ணைகள் உள்ளன. அவை அனைத்திலும் வைஸ் தொற்று பரவியுள்ளது. ஒரு பண்ணையில் 800 பன்றிகளில் 200க்கும் மேற்பட்டவை உயிரிழந்துள்ளன. மற்றைய பண்ணைகளில் 60 பன்றிகள் உயிரிழந்துள்ளன. மேலும், ஒவ்வொரு பண்ணையிலும் நூற்றுக்கணக்கான பன்றிக்குட்டிகள் உயிரிழந்துள்ளன.

இதேவேளை, வைரஸ் நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு தேவையான மருந்துகள் கால்நடை அலுவலகங்களில் இல்லை. இருப்பினும், பாதிக்கப்பட்ட பன்றிகளை பார்வையிட்டு இதுவரை வைரஸ் தொற்றுக்குள்ளாகாத பன்றிகளுக்கு தடுப்பூசி போடுவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளோம் என நுவரகம்பலாத்த மத்திய கால்நடை வைத்திய நிபுணர் வைத்தியர் பிரசாத் மடத்துவ தெரிவித்துள்ளார். (05)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரால் உதவி



கொகமுல்ல, மெகொட, கொலன்னாவ பகுதியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 650 குடும்பங்களுக்கு இனம், சாதி அல்லது மதம் ஆகியவற்றைக் கடந்து, பாகிஸ்தானின் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) ஃபஹீம் உல் அசிஸால் ஒக்ரோபர் 15 ஆம் திகதி அல் நூரானியா பள்ளிவாசல் வளாகத்தில் வைத்து உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கையில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாகிஸ்தானின் மனிதாபிமான நிவாரண உதவி வழங்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக இம் முயற்சி அமைந்திருந்தது.

(05)



காலைக்கதிர் Kalaikkathir

# அரிசி விற்பனையை புறக்கணிக்க முயற்சி

## மொத்த, சில்லறை வியாபாரிகள் சங்கம் நடவடிக்கை



நாட்டுமக்களின்நலன்கருதிஅரிசியைகட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அகில இலங்கை அத்தியாவசிய மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகளினது சங்கம்நடவடிக்கை எடுத்துவருவதாகவும் இவ்வாறு கட்டுப்பாட்டு விலைக்கு அரிசியை விற்க முடியா விட்டால் அரிசிவிற்பனையைப் புறக்கணிக்க சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும்இதுதொடர்பில்இன்னும்சிலதினங்களில் சங்கம் ஊடக சந்திப்பின் மூலம் இதனை அறிவிப்பு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை அத்தியாவசிய மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகளினது சங்கம், மாவட்ட ரீதியாக வர்த்தக சங்க கிளைகளை உருவாக்கும் திட்டத்தின் கீழ் முதலாவதாகக் கண்டி மாவட்ட அத்தியாவசிய மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகளினது சங்கக் கிளை அங்குரார்ப்பண கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அதன் தலைவர் டபிள்யூ எம்.நாஜிம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தின் சிங்கள, தமிழ், முஸ்லீம் வர்த்தகர்களை உள்ளடக்கிய சங்க அங்குரார்ப்பண கூட்டம் மடவளை மதினா தேசிய பாடசாலை அஷ்ரப் மண்டபத்தில் நடைபெற்றன.

தொடர்ந்து உரையாற்றி தலைவர் –

பலவகையான அரசி வகையில் பல்வேறுபட்ட கட்டுப்பாடு விலைகள் காணப்படுகின்றன, அந்த வகையில் நாம் உதாரணத்திற்கு நாட்டரசியை எடுத்துக்கொண்டால் அரிசிக்கு 220 ரூபா கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள போதிலும், அந்த விலைக்கு விற்கக்கூடிய விலையில்வியாபாரிகளுக்கு அரிசி கிடைப்பதில்லை. அதுபோன்றுஅரிசிவகைகள் மட்டுமன்றிபலஅத்தியாவசிய பொருள்களுக்கான நிலைமைகளும் இவ்வாறானநிலையே காணப்படுகின்றன.

சில வரத்தகர்கள் 230 ரூபாவுக்கு அரிசியை பெற்று 235 அல்லது 240 ரூபாக்கு விற்பனை செய்தால், அதிக விலைக்கு விற்பனை செய்ததாக நுகர்வோர் அதிகார சபையினர் அவர்களைக் கைது செய்து அவர்களைக் கறுப்பு வியாபாரிகள் என்று குற்றம் சாட்டுகின்றனர்.

ஆகவே, இந்த அரிசி விற்பனை தொடர்பில் வர்த்தகர்களை பாதிக்காதவகையிலும் நுகர்வோர்களுக்கு பாரமில்லாததுமான வகையில் முறையான நியாயமொன்றை மேற்கொள்ள சம்பந்தப்பட்டவர்களுடன் நாம் கலந்துரையாடவுள்ளோம் இதுதொடர்பில் ஊடகசந்திப்பொன்றை நடத்தவும் சங்கம் தீர்மானித்துள்ளது.

மேலும் விளக்கங்களை உரிய அதிகாரிகளைக் கொண்டு மீண்டும் வர்த்தகர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்படும் அதுபோல் வர்த்தகர் எதிர்நோக்கும் பல அடிப்படை பிரச்சினைகள் குறித்தும் உரிய மட்டத்தில் பேசி தீர்வைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வர்த்தக சமுகத்திற்கு விடுமுறை இல்லை, ஓய்வூதியமில்லை ஏனையோருக்குக் கிடைக்கின்ற அரச சலுகைகள் வியாபார சமூகத்திற்கு கிடைப்பதில்லை. நாட்டின் பொளருளாதார விருத்திற்கு வியாபாரிகளின் வரி இன்றிமையாதொன்றாகும் பல்வேறுதேவைகள் நிமித்தம் அதிகமான வர்த்தக நிலையங்களுக்குத்தனியாகவும்மற்றும்அமைப்புகள் ரீதியாகவும் வருகின்றனர் அவர்களுக்கும் எம்மால் முடிந்த உதவிகளை புரியவேண்டியுள்ளது.

மேலும்வர்த்தகர்களானநாங்கள் இயந்திரமாகவே தமது வாழ்க்கையை முன்னெடுக்கின்றோம். அவ்வாறு இருந்த போதிலும் சமூக சேவையின் பொருட்டு நாட்டுக்கும் மக்களுக்கும் வியாபாரிகள் பல்வேறு வகையில் பங்களிப்பு செய்வதை எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது, ஆகவே. வர்த்தகர்கள் முன்னோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு தேவைப்படுகின்றன. அவர்கள் சுதந்திரமாக வியாபாரம் செய்யக்கூடிய உரியசூழல்களைஏற்படுத்தவும்சங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

அகில இலங்கை மற்றும் கண்டி மாவட்ட அத்தியாவசிய மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகளினது சங்கம் பொது செயலாளர், தேசிய அமைப்பாளர் உள்ளிட்ட பலரும் இங்கு உரையாற்றினர்.(05)

# புலமைப் பரிசில் பரீட்சையை மீள நடத்துமாறுகோரி வழக்கு

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தாளை இரத்துச் செய்து மறு பரீட்சைக்கு உத்தரவிடுமாறு கோரி புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர் குழுவும், பெற்றோர்கள் குழுவும் உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவை செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்தனர்.

செப்டம்பர் 15 நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பான முதல் வினாத்தாளின் மூன்று கேள்விகள் பரீட்சைக்கு முன்னதாகவே வெளியே கசிந்ததாகப் பரவிய செய்திகள் தொடர்பில் விசாரணை நடத்திய கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்களம் என்பன பரீட்சையை மீள நடத்துவதில்லை என்று முடிவு செய்தன. பதிலாகசர்ச்சைக்குரியமூன்று கேள்விகளுக்குமான புள்ளிகளை அனைத்து மாணவர்களுக்கும் வழங்குவதுஎன்றுதீர்மானிக்கப்பட்டது.

இதை எதிர்த்து வழக்கைத் தாக்கல் செய்துள்ள மனுதாரர்கள், கடந்த ஐந்து வருடங்களாக புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ளனனர்.

கஸ்பேவகுடியிருப்பாளர் ஜி. மங்கள மற்றும் அவரது மகள் உள்ளிட்ட 54 பேர் தாக்கல் செய்த இந்த அடிப்படை உரிமை மனுவில், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் அமைச்சரவை பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்ததையடுத்து வினாத்தாள் மதிப்பீட்டை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்ததாக தெரிவிக்கும் மனுதாரர்கள், பின்னர் மீள் பரீட்சையை நடத்தப்போவதில்லைஎன்றுஅதிகார்கள் முடிவெடுத்தமை தமது அடிப்படை உரிமையை மீறும் செயல் என்றும் வாதிட்டுள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.10.2024இல் வெளியிடப்பெற்றது